

# மங்களம் அருளும் மாருதி

தோத்திரம், கவசம், தியான ஸ்லோகம்,
போற்றி அடங்கிய தொகுப்பு.

# மங்களம் அருளும் மாருதி



தோத்திரம், கவசம், தியான ஸ்லோகம்,
போற்றி அடங்கிய தொகுப்பு.

ஸ்ரீராம ஜெயம்

நவக்கிரகங்களின் அதிபதியும்,
மங்களம் அருளும் மாருதியுமான
ஸ்ரீ ஜெயவீர ஆஞ்சநேயப் பெருமானை
அனைவரும் வணங்கி,
அவரின் அனுக்கிரஹம் பெற்று,
நலமோடும், வளமோடும்,
வாழவேண்டும் என்ற
நல்லெண்ணத்துடன்,
பலநூல்களில் இருந்து
தொகுக்கப்பட்ட
இச்சிறிய நூலை,
ஸ்ரீ சந்திர சேகர
சுவாமிகளின்
நல்லாசியுடன்,
உங்கள்
பொற்கரங்களில்
சமர்ப்பிக்கிறேன்.

பக்தியுடன்
"இரட்டைப்பாதை சேகர்"

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | அனுமன் துதி | 03 |
| 2. | மாருதி கவசம் | 01 |
| 3. | சத்ரு ஜெயதுதி (ஹே அனுமாரே) | 66 |
| 4. | அனுமான் சாலீசா | 71 |
| 5. | ஓம்பூர் புவஸ்வக | 77 |
| 6. | அன்பர்கள் இடரை (ஸ்ரீராம ஜெய ஸ்தோத்திரம்) | 78 |
| 7. | ஸ்ரீ அனுமன் தியான ஸ்லோகங்கள் | 79 |
| 8. | ஆஞ்சநேய நாமாவளி | 80 |
| 9. | போற்றி | 81 |
| 10. | போற்றி | 81 |
| 11. | மங்களகானம் | 90 |

# அனுமன் துதி

அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக
ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கை கண்டயலாரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான்
அவன் நன்மை அளித்துகாப்பான் -மகாகவி கம்பன்

## பொருள்

ஐம்பூதங்களின் ஒன்றான வாயுவைத் தன் தந்தையாகப் பெற்றான்.ஐம்பூதங்களில் ஒன்றான நீராகிய கடலைத் தாண்டி, ஐம்பூதங்களில் ஒன்றான ஆகாயத்தை வழியாக அமைத்துக் கொண்டு அறத்தின் மூர்த்தியாகிய இராமபிரான் பொருட்டு இலங்கை சென்று ஐம்பூதங்களில் ஒன்றான நிலம் பெற்றெடுத்த சீதை அங்கு சிறைப்பட்டிருத்தலை அறிந்து பகைவரின் ஊராகிய இலங்கையை ஐம்பூதங்களில் ஒன்றான நெருப்பால் எரித்தவனுமான ஆஞ்சநேயன் காத்தருள்வானாக.

புத்தியும் பலமும் தூய
புகழொடு துணிவும், நெஞ்சில்
பக்தியும் அச்சமில்லாப்
பணிவும் நோய் இல்லா வாழ்வும்,
உத்தம ஞானச் சொல்லின்
ஆற்றலும் இம்மை வாழ்வில்
அத்தனை பொருளும் சேரும்
அனுமனை நினைப்பவர்க்கே

# ஸ்ரீ மாருதி கவசம்

மார்கழி மூலம் அனுமன் பிறந்தான்
அனைவர்க் கருள அவனியில் வந்தான்
அஞ்சனை மாருதம் அளித்த நற்செல்வன்
அனுமனை போற்றி அவனியில் வாழ்த்த
வஞ்சனை நீக்கும் அஞ்சனை செல்வன்
கதாயுதனை காற்றின் மைந்தனை இன்சொல்
அதே கொண்டு அவனே அனைத்தும் காக்க
சதா அபி டேகம் சாற்றுவர் உவந்து

காக்க காக்க அனுமன் காக்க
நோக்க நோக்க நுணுகி நோக்க
தீர்க்க தீர்க்க தீவினை எல்லாம்
சேர்க்க சேர்க்க செம்பொருள் அனைத்தும்

ஆர்க்கும் பகைவர் அலறிஓடிட
வேர்க்கள் பகையாய் விழைந்தவர் அழிய
காக்க காக்க கண்ணுதல் காக்க
பார்க்குள் அவன்போல் இறைவன் இல்லை

ஓம்ரீம் ஸ்ரீஜெய ராம் எனும் அனுமன்
க்ரீம் க்ளீம் ஸ்ரீராம பக்த அனுமன்
ஹம்க்ரீம் என்றே கொடியில் ஆர்க்கும்
ஸ்ரீஜெ ராம பக்த அனுமன்

காக்க காக்க கவசம் இதனை
போக்க போக்க பொய்யை தீய்மையை
தீய்க்க தீய்க்க தீவினை எல்லாம்
சேயாய் பிறந்து செய்வினை அறிந்து

சேவை செய்ய வாயு உகந்தான்
ஆவி அனைய அஞ்சனை மாதும்
அதனை உகந்தாள் அவனி உதித்தான்
மாருதி என்போன் மாருதம் அனையவன்

பாரதில் என்றும் நிலவும் சீரோன்
பாரதம் போற்றும் பண்பு டையாளன்
காரணம் அவனே காருண்யம் அவனே
நாரணன் ராமன் நடவெனச் சொன்னான்

ஆதவன் மகிழ்ந்து கல்வியைத் தரவும்
பூதவம் செய்ததால் பூமியில் வாழ்ந்தும்
மாதவம் இயற்றுசி ரஞ்சீவி அவனே
ஆதவன் குலத்தின் ஆணி அவனே

ராமனும் கண்ணனும் வாழ்தநற் பூமியில்
ராமனைத் தன்னுடை நெஞ்சினில் வைத்தான்
ராகவன் தூதன் ஆதவன் குலத்தைக்
காத்து நின்றவன் காக்க என்னை

காக்க காக்க அனுமன் காக்க
காக்க காக்க கால்கள் இரண்டை
காக்க காக்க கணுக்கால் முழந்தாள்
காக்க காக்க கருணையில் காக்க

தீக்குள் புகையாய் திகழும் பொய்மை
போக்க போக்க புன்மையைப் போக்க
குருதி அதனில் ஒருரணம் இன்றி
மாருதி காக்க மாருதம் போல

இறுதி இல்லா இறைவன் காக்க
உறுதி அளிக்கும் உயர்வோன் காக்க
அஞ்சனை செல்வன் அடியினை காக்க
வஞ்சனை ஏதும் வாட்டா வண்ணம்

ஆஞ்ச நேயனே அடிவயிறு காக்க
துஞ்சும் போதும் துயருறா வண்ணம்
காக்க அனுமன் கண்ணினை காக்க
போக்க எந்தப் பொல்லா வினையும்

நோக்க நோக்க உண்மையை உறுதியை
தீக்குள் இலங்கை செற்றான் காக்க
போக்கும் வரத்தும் கபீந்திரன் காக்க
நோக்கம் காக்க நுணுகி நோக்க

பிட்டம் அதனை அனுமன் காக்க
வட்டக் குதத்தை வாலினால் காக்க
அட்டமச் சனியால் அடையும் துன்பம்
அனைத்தும் நீக்கி அனுமன் காக்க

சிற்றிடை அதனை அஞ்சனை செல்வன்
சிறப்புடன் காக்க சேர்க்கப் பெருமை
நற்றவ மிக்கோர் நவையறு நல்லோர்
நாணங் கயிற்றை அனுமன் காக்க

நற்குறி தன்னை காற்றின் செல்வன்
காக்க காக்க காக்கவந் துவந்தே
மார்பின் மதாணி மதகரி கேள்வன்
மாருதி காக்க மதிக்க வந்துவந்தே

ஆர்முன் பின்னென் றதுஒரு கேள்வி
ஆகா வண்ணம் அனுமன் காக்க
சீர்வனம் உறும் இறை செல்வன் காக்க
சீர்த்திகள் அருள்க செந்திரு மாலென

கூர்நக முடைய குரங்கனித் தலைவன்
காக்க காக்க கதிர்முடி யாலே
ஆர்க்க ஆர்க்க அனைத்துயர் போக்களம்
வேர்க்க வேர்க்க சூர்ப்பகை வெருள

தீர்க்க தீர்க்க தினகரன் மாணி
தீராக் கொடுமை எல்லாம் தீர்க்க
ஈரல் இரைப்பை இதனைக் காக்க
ஆவலைத் தூண்டும் அரியவன் நீயே

ஆமரி அவனின் ஓர் துணை நீதான்
போயெவர்க் கூறினும் போற்றுதல் அறிபார்
நீயறி இதனை நினைவாய்க் கொண்டே
நித்தம் நேர்ந்திடில் நிரம்ப சந்தோஷமே

மார்பைக் காக்க மாருதி மகிழ்ந்தே
மற்றுள உறுப்பை மகிமையன் காக்க,
சார்புள உறுப்பை சற்குணன் காக்க
சற்று மேலான கழுத்தை அனுமன்

ஆர்வமுடனே அணைத்தெனைக் காக்க
அனைத்துப் பல்லையும் அனுமன்காக்க
அருவிழி இரண்டும் சூர்ப்பகை காக்க
அனைத்துப் பெருமை எனக்கு உறினும்

தருவெனும் அனுமன் என் சிரம் காக்க
நாசிபை வாசிபை நல்லவன் காக்க
பெருமைகொள் அனுமன் பிடரியைக் காக்க
பேசிடும் நாவைப் பெரியோன் காக்க

அருவிழி தன்னில் அனுமன் காக்க
அரஹர சிவ சிவ ஸ்ரீஜெய ராமமென
அனைவரும் துதிக்கும் அனுமனே காக்க
காக்க காக்க கவலைகள் நீக்க

ஐயும் கிலியும் சௌவும் நீக்கி
அனைத்தும் அழிக்கும் அரியவன் காக்க
பொய்யும் களவும் போதாறு கென்றே
புரையா அன்பு மறைமுதல் காக்க

எய்யும் கணைபோல் இறைவர்க் காமோர்
இமையே போலும் தூதன் காக்க
செய்யும் செயலில் செம்மை வல்லான்
செம்பொருள் காக்க சிறந்திடக் காக்க

## நவகோள் தோஷம் நீங்க

சனியின் தந்தை உன்னகுரு நாதன்
சற்குணன் பருதி அதனால் தொல்லை
இனியெனக் கில்லை என்றும் காக்க
இமையாத் தேவர் வியப்பினில் ஆழ

கனியெனம் எம்மிறை கண்ணுதற் பெருமான்
உனைவடித் திட்டனர் உத்தமப் பொருளாய்ப்
பனிமிகும் மார்கழி மூலம் கேது
பார்புகழ் வலியவன் காலில் தோன்றினை

இனியன நல்குவை எத்தோஷ மாயினும் !
இன்குரு வீட்டினில் பிறந்தவ னன்றோ !
இராகு செவ்வாயும் உன்னருள் இருப்பின்
இராவுமத் துன்பம் இதுதான் உண்மை

புராதனன் புனிதன் இராமன் போற்றும்
புண்ணிய மூர்த்தி கண்ணியன் அனுமன்
விராதனை வென்றோன் வேண்டிய நல்கும்
வினயமே ஆஞ்ச நேயன் என்றறிநீ,

குராமணம் கொண்ட கூந்தற் கோவியர்
திரோதயுகத்தில் இவனைத் தேர்ந்தான்
தேர்ந்தவன் தன்னை சேர்ந்தனன் அதனால்
தீர்த்தனன் பெரும்பகை செழும்புகழ் கொண்டான்

நேர்ந்தனன் மனத்தில் நினைவில் கனவில்
ஓர்ந்தனன் அவனை அவனே அனுமன்
சூரிய சுக்கிர புதபக வானும்
ஆரியன் உன்சொல் அறியாரோகாண்
வேரியங் கமலைச் செல்வி ஸ்ரீ தேவி
வேட்டனளே உனைச் சிரஞ்சீவி என்றே.

## வருக வருக அனுமன் வருக

வருக  வருக அனுமன் வருக
வருக வருக அஞ்சனை சிறுவன்
கெருவம் தீர்க் வருக அனுமன்
அருவரு அதுவாய் அனுமன் வருக
ராமசாமியின்  தூதன் வருக
நாமம் ஆயிரம் சாற்றுவோன் வருக

காமம் நீக்கிய கடவுள் வருக
ஏமப் புணையாம் எம்மிறை வருக
அருளுரு வாகிய ஐயா வருக
தெருளினை மாற்றும் ஒருவர் வருக
உருகவே வைக்கும் ஒருவர் வருக
மருளற வைக்கும் மாருதி வருக
விந்தைக் கிறையாம் வித்தே வருக
முந்தித் தவம்செய் மூதறி முதல்வா
சிந்தித்து இன்னே சீக்கிரம் வருக
வந்தித்தோம் உனை வருகவென்று உவந்தே.

## முந்துக முந்துக முந்துக

முந்துக முந்துக முதல்வன் முந்துக
செந்தணல் படவழ கெழுதிய ஓவியம்

முந்துக முந்துக முறையுடன் முந்துக
இந்தனம் அதனில் இலங்கையை எரித்த
அந்தண முந்துக அறவோன் முந்துக
நந்தியின் நாதனும் நாரண தேவனும்
அந்தியும் பகலும் சிந்தித் திருக்கும்
சிந்தையன் முந்துக சீரியன் முந்துக
சீமான் அனுமன் செம்பொருள் முந்துக.

## வழிபடும் முறை

சிலையொடு சித்திரம் கதையொடு ஆரல்
நிலைவிளக் கதனொடு நேரிய குடும்பம்
வலையென உன்றனை விரித்திடும் மந்திரம்
நிலைபெறக் கூறி தகுவன சாத்தி

வழிபடு போதில் வருவாய் அதனில்
இழிவுற இலங்கை எரித்தவப் போதில்
எழிலுறு வுடைய எம்மிறை நீயே
ஒழித்தனை அன்றோ ஒண்ணா அவுணர்

அந்தப் போதில் ஆர்த்தநல் நெஞ்சம்
இந்தப் போதில் இங்குற வேண்டும்
எந்தப் போதில் எதுவரு மேனும்
நிந்தனை இன்றி நிகழ்ந்திட வேண்டும்

கந்தம் துளசி களப கஸ்தூரி
சொந்தம் சாந்தம் சுந்தரன் தனக்கே
தந்திடு வெண்ணை தகுவடை மாலை
நொந்திடா வண்ணம் வெற்றிலை மாலை

பன்னீர் ஆட்டுக பங்கயன் தனக்கே
நன்னீர் ஆட்டுக நாயகன் தனக்கே
உண்ணீர் என்றே ஊட்டுக பல்கனி
எண்ணீர் இவனே எம்மிறை என்பீர்

மாருதி உண்டேல் சோருதல் இல்லை
ஆறுதல் அவனே அவனே இறைவன்
காரியம் காரணம் ஆனவன் அவனே
கருதிய நிகழ்த்தும் கண்ணனும் அவனே
வேரியங்கமலைச் செல்வியம் போற்றும்
மாருதி தன்னை மனதில் இறுத்துக.

## பயன்

வஞ்சனை அகலும் வயிரம் வாய்க்கும்
துஞ்சிடும் போதும் துன்பம் வராது காண்
அஞ்சுவர் பகைவர் அடலே றனையான்
நஞ்சுண்டாலும் நம்முயிர் காப்பான்

மனையின் வஞ்சகம் நீக்குவன், மாற்றுவன்
புணைபோல் பொய்யா கூட்டைக் களவை,
தினமுமுன் முன்னரே தெரிகுவன் மாருதி
இனமுடன் வாழ்ந்திட இனியன நல்குவன

கோளுறு பாபம் தீர்க்கும் அனுமன்
பாழ்பிற விதனையே நீக்கும் அனுமன்
கேளென வந்து உதவிடும் அனுமன்
வாழ்வுறச் செய்யும் வடிவவுடை இறைவன்

நாற்பதோ டைந்து நாளே அவனை
நோற்பவர் பற்பல பெறுவர் இதனை
நூற்பயன் என்ன நுவலும் துளசி
நாற்பயன் பெற்றிட நல்குவன் அனுமன்

அனுமன் எனுமோர் அறமே கவசம்
அனுமன் எனுமோர் அறிவே கவசம்
அனுமன் எனுமோர் அணுநேர்த் தியனே
தினமென் கவசம் திவ்வியம் அருள்வோன்

## ஸ்ரீ அனுமன் கீர்த்தித் திருவகவல்

அஞ்சனை வாயு மைந்தனாய் பிறந்து
அஞ்சல் அறியா அருமணி ஆனதும்
செஞ்சுடர் தனையொரு பழமெனக் கருதி
பிஞ்சுக் கரத்தில் பிடித்துப் புசித்து

047-A

வஞ்சம் ஒன்றில்லா வடிவழ குற்றதும்
சூதர் வஞ்சனைச் சுரத்திடை வீழ்ந்த
பாரைச் சீருறப் பாலிக்க இராமன்
பாரில் மானுட வடிவம் தாங்க

மாறில் மாருதி தூதவன் ஆனதும்,
போரில் வல்ல வாலியின் பலத்தை
சீருடை இராமன் சிதைத்திடச் செய்ததும்
மாறில் சுக்ரி வன்றனக் கரசை

வள்ளலின் துணையால் வழங்கிய பான்மையும்
வள்ளலின் பின்னே வனத்தே திரிந்து
கள்ள இராவணன் கவர்ந்த தேவியை
உள்ளம் தன்னில் உகந்த இராமர்க்காய்

தென்றிசை நோக்கிச் தூதுஎனச் சென்றதும்
குன்றுநின் றிவந்து ஸ்ரீ ஜெய ராமென
ஓகைக் கடலினைத் தாவிக் குதித்தே
வாகை சூடி வலிய அரக்கி

இலங்கணி தன்னை கொன்றுயிர் குடித்ததும்
பிலமதில் புக்கு பெண்ணுறு சாபம்
இலையென ஆக்கி இலங்கை புகுந்ததும்
கொலைமலி சிலைக்கை அரக்கரின் சூழல்

அலைந்து திரிந்து இராமனின் ஆவிநேர்
தேவியை அசோக வனத்தில் கண்டதும்
பாவியை நொந்து ஆவியை நீக்கத்
துணிந்த தேவியை துணிவுடன் காத்து

அணிந்த இராமனின் ஆழியைக் காட்டி
இராம தூதன் தானெனச் சாற்றி
இராமனைக் கொண்டாள் உவப்பச் செய்ததும்
அன்னை செந்திரு 'என்றும் நீ வாழ்' கென

அன்பன் அனுமனை வாழ்த்திய வண்மையும்
சூடாமணியைச் சுடர்க்கொடி ஈந்ததும்
வாடா மலரென வள்ளலை உன்னியே
பீடுயர் செல்வி விடைதரச் சென்றதும்

கேடுறு பகைவன் இராவணன் அறியக்
கேட்டினை இலங்கை பூண்டிட வைத்ததும்
அக்ககுமாரன் தொக்கபல் அவுணர்
மிக்க படைகள் அழிவுறச் செய்ததும்

நக்க இராவணன் தன்னிடம் தன்னை
மிக்க இராமனின் தூதன் நான் என்றதும்
மிக்க புகழுடை இந்திர சித்தனின்
நாக பாசத்தில் பிணைப்புற் றதன்பின்னர்

வேக வாலின் நெருப்பிடை இலங்கையின்
ஆகம் முற்றிலும் அனலெரி யூட்டியும்
போக பூமியை நீங்கித் தாவியே
புங்க வன்திரு அடியினை பூண்டதும்

அங்கம் புளகமே அவனுறத் தேவியின்
மங்காக் கொள்கையை மனங்கொளச் சொன்னதும்
துங்க இராமன் துயரறப் படைதனை
எங்கும் நடத்தி கடல்வலி கெடுத்ததும்

பொங்கும் புனலிடை புத்தணை கட்டியே
நங்குலச் செம்மலை இலங்கை புகுத்ததும்
போரிடைப் பொருதலும் ஓங்கார மிட்டதும்
வேரறப் பகையை விலக்கி முறித்ததும்

சீருடை இளவில் மயக்கம் அகல
சீறிப் பாய்ந்து சஞ்சீவியைக் கொணர்ந்ததும்
மாறுகொள் பகைவர் மாய்ந்த பின்னர்
மணிமுடி வீடணர்க் காக்கிய மாண்பினை

வியந்து நயந்து ஸ்ரீஜெய ராமென
அயர்ந்த பரதனை நந்தியம் பதிதனில்
உயர்ந்து வானுறு தூதெனச் சென்றதும்
ஒரு இல் ஒரு சொல் ஒருவில் லிராமன்

உருவினைத் திருவினை இளவலை நெஞ்சில்
மறுவறு வைத்துக் காட்டிய மாண்பதும்
பொருவிலா வள்ளல் மணிமுடி புனைய
மறுவிலா அரியணை தாங்கிய மாண்பும்

அனுமனை அஞ்சனை மைந்தனை இறையை
தனுவெனும் மாதம் மூலத் திருவை
அனந்தனும் போற்றும் அற்புதன்தன்னை
மனந்தனில் தெளிந்த பிரம்மச் சாரியை

இனந்தனில் பெரிய இன்சொல் வல்லானை
மாறிலாக் காற்றின் மைந்தனைப் பருதி
மாறிலாக் குருவாய் அமைந்துகந் தளித்த
ஈறிலாக் கல்வி இளையோன் தன்னை

மாருதி எனும் பெயர் மாசறு தீபச்
சுடரை திடமே தினம்தரு வோனை
அடலே றனைய வஜ்ர தேகனை நீ
அனுதினம் நினைக நினைக நெஞ்சமே
அனுமனால் அனைத்தும் அகிலத்தில் பூக்குமே.

★ ★ ★

047-A

# ஸ்ரீ ஆஞ்சநேயர் அந்தாதி

## கணபதி வணக்கம்

புத்தியும் பலமும் நல்ல
புகழொடு உறுதிப் பாடும்
சிந்தையில் அச்சம் இல்லா
சிறந்த ஆரோக்கியம் நல்கும்
எந்தையை வாக்கு என்மை
இதனோடு விழிப்பை நல்கும்
அந்தமில் அனுமன் தன்னை
அழகுறப் பாடு தற்கே
கண்ணுதல் ஈன்ற செல்வக்
களிறெனும் இறைவன் தாளை
எண்ணினேன் தனது கோட்டால்
எழுதரு மறையைத் தந்த
முன்னவன் அருளே தந்து
முழுவதும் காக்க என்று
பண்ணியம் பாலும் தேனும்
பாகொடு படைத்தேன் காப்பான்.

## நூல் வாக்குவன்மை ஏற்பட

காக்க என்றும் கற்பகமாய்
கண்ணருள் தந்தே அஞ்சனையின்
நோக்கம் வாழ்வு தானான
நுன்ன றிவுடைய அனுமானே
வாக்கு வன்மை தந்தெனக்கே
வகைதொகை யாகக் காத்திடுக
தீக்கொள் இறைவன் பின்சென்றே
தெளியக் கற்றோன் காத்திடுக.

## வெப்பு நோய் நீங்க

காக்க அசோக வனம் சென்றான்
கண்டான் அன்னை சீதையினை
நோக்கம் ஒன்றே ராமதூதன்
நுட்பம் வாக்கில் கொண்டானே
ஆக்கம் சேர்க்க இலங்கையினை
அழலில் எரிய விட்டவன்தான்
ஆக்கை வெப்பில் உழலாமல்
அனுமன் என்னைக் காத்திடுக.

## தேகபலம் பெற

கண்ணுதல் பெருமான் தானும்
கவின்பெரு மாளும் உன்னை
எண்ணியே மகிழ்வர் வீரம்
ஏன்றனை விண்ணும் போற்ற
எண்ணினேன் உன்னை என்றன்
எழிலுரு தேகம் தன்னில்
நண்ணிடப் பலமும் வேட்டேன்
நல்குவை அனும காக்க.

## பேய், பிசாசு பயம் நீங்க

காக்கமா ருதியே நீயும்
கடுவினை நல்கும் பேயும்
போக்கரு பிசாசு தானும்
புகுந்தெனை வருத்தா வண்ணம்
நீக்கரு அன்பா என்றன்
நினைவெலாம் அனும நீயும்
போக்குவை பயத்தை நீக்கி
பொன்னடி என்னைக் காக்க

## பில்லி சூனியம் நீங்க

காக்கநீ காற்றின் மைந்த
கடுமைகொள் பில்லி சூனியம்
போக்கிநீ என்னைக் காக்க
புரந்தரன் போற்றும் செல்வ
நோக்கநீ ஏழை தன்னை
நுவலரு வலிமை உள்ளோய்
தாக்கிநீ அசுரர் தம்மை
அழித்தவா என்னைக் காக்க.

## பகை அழிய

கடுவிறல் வாலி தன்னைக்
காகுத்தன் அழிக்க வைத்த
அடுதிறல் அனுமன் என்னை
அரும்பகை அழித்துக் காக்க
சடுதியில் வருவாய் சிந்தை
சார்குவை அதனில் நின்றே
கெடுதிகள் நேரா வண்ணம்
கீர்த்தியாய்க் காக்க காக்க.

047-A

## உத்யோக வாய்ப்பு ஏற்பட

சுடுவரல் அருவி சூழும்
கானமே திரியும் செல்வ !
விடலரி யாத நட்பின்
விரும்பி சுக்ரீ வனுக்கே
திடமுடை அரசு நல்கித்
திளைத்தனை மகிழ்ச்சி கொண்டே
அடுதிறல் அனும என்னை
ஆதரித் திந்தாள் காக்க

## ஆயுள் பலம் பெற

கடுவினைப் பயனால் யாக்கை
கலங்கநான் மாளாவண்ணம்
சடுதியில் காக்க என்றும்
சற்குணச் சிரஞ்சீ விநீயே
அடுதிறல் வீமன் முன்னோய்
அமைந்தனை ஆற்றல் வல்லாய்
கடுஞ்சனிப் பார்வை நீக்கி
காக்கநீ என்னை மாதோ

## திருமணம் கைகூட

ஓம் ஸ்ரீராமா என்று
ஒலிகடல் தாண்டிச் சென்றாய்
தாமெனும் அரக்கர் மண்ணில்
தாயினைக் கண்டாய்; தூதன்
தாமெனக் கூறி வென்றாய்
தகுபுகழ் சேர்த்து மீண்டாய்
ஆமென தில்லின் கண்ணே
அருமணம் கூட்டிக் காக்க

## கிரக பீடை நீங்க

காக்கநீ சனியும் இராகும்
கேதுவும் கெடுக்கா வண்ணம்
நோக்கினை என்றால் நீங்கும்
நொடியினில் அவரின் பார்வை
போக்கிடு தீமை தன்னை
புண்ணியம் தரவே வந்து
ஏக்கமும் நீக்கும் ஆஞ்ச
நேயனே எம்மைக் காக்க

## மந்திர சித்தி ஏற்பட

காக்கநீ எம்மைக் காக்க
கனமந்ர சித்தி தந்தே
ஆக்கமும் சேர்க்கும் ஆற்றல்
அனைத்தையும் அறித்தோன் நீயே
தேக்கமில் கல்வி ஞானம்
தெளிவுடைப் பரனே எம்மைக்
காக்கநீ சக்தி தந்தே
காகுத்தன் தூத காக்க

## சர்வ துன்பங்களும் நிவர்த்தியாக

கண்ணுறும் கவலை எல்லாம்
கடிதிலே நீங்கச் செய்வாய்
புண்ணுறும் மனதில் இன்பம்
பொழிந்திடக் கருணை செய்வாய்
எண்ணுறும் எண்ணம் எல்லாம்
ஈடேற்றிக் காக்க என்றும்
எண்ணினால் தோன்றும் செல்வா
இடுக்கணே இன்றிக் காக்க.

## நினைத்தவை பலிதமாக

அசோக வனத்தில் முன்னாள்
அலைந்துநீ திரிந்த போது
விசனத்தில் இருந்த தாயின்
விழியினில் கருணை சேர்த்தாய்
உசாவிநீ ஆழி தந்து
உன்றனின் பெருமை சேர்த்தாய்
விசனத்தில் நினைத்த எண்ணம்
வென்றிடக் காக்க நீயே.

## செய்வினை நீங்க

நீயேஎன் நினைவில் நின்ற
நெடுமாலும் பரனும் நீயே
தாயேபோல் தயவும் உள்ளாய்
தடுமாறும் என்னைக் காக்க
நாயே போல் தோன்றிப் பின்னர்
நல்லதோர் பூனை யாகி
பேயேபோல் மறையும் அந்தப்
பிறர்செய் வினையை நீக்கு.

047-A

## நெருப்பினால் நேரும் துன்பம் நீங்க

குழந்தையாய் இருந்த போதே
குமுறிநீ வானம் பாய்ந்து
அழலிறை பானு தன்னை
அருந்தினை அமுதைப் போல
அழகினுக் கழகு தன்னை
அதனால்நீ பெற்றாய் அப்பா
அழலிடை விளையும் துன்பம்
அதனைநீ நீக்கிக் காக்க.

## தத்வ ஞானமேற்பட

கடந்தநாள் இந்நாள் பின்னாள்
கண்ணுறும் கடவுள் நீயே
அடைந்ததோர் தத்வ ஞானம்
மேம்பட அருள்வாய் அப்பா
அடைந்தனை சூரியன் பால்
அழகனே அமுதே எங்கள்
இடந்தனில் வந்தே காக்க
ஈடறு மகா வீர.

## கல்வி நலம் வாய்க்க

வீரனே சூரர் தம்மை
வென்றனை இலங்கை மண்ணில்
காரணன் நீயே யன்றோ
கருதினோம் உன்னை அன்பால்
பாரெல்லாம் உந்தன் சீரே
பரவிடச் செய்தாய் இன்று
காரெனக் கருணை கொண்டு
கல்வியே தந்து காக்க.

## சகோதர நலம் வாய்க்க

கலைநலம் கொண்டாய் வென்றாய்
கண்ணனின் காலம் தன்னில்
இலைமறை காயைப் போல
இருந்தனை கானம் தன்னில்
உலைவுற உந்தன் தம்பி
உன்னுடைய வலிமை கண்டான்
அலையுறும் துரும்பே போலும்
அன்புச் சகோதரரைக் காக்க.

## பிரயாணம் வெற்றியடைய

கண்ணினில் கருணை கொண்ட
கனகமே ஆஞ்ச நேயா
மண்ணினில் பயணம் செய்து
மாபெரும் தனமே கொள்ள
புண்ணியா காக்க வேண்டும்
போயினை இலங்கை நீயும்
பன்னலம் பெற்றே மீண்டாய்
படைக்கநீ எங்க ளுக்கே.

## பொன் பொருள் சேர

ஏவொன்று சொல்லும் ஒன்று
இல்லமும் ஒன்றே என்று
நீயென்றும் ஒன்றும் ராமன்
நினைவுடன் இதையும் கொள்க
காவொன்று தருவைப் பூவை
தடங்கனிப் பலவை வேட்பாய்
காத்திடக் கனகம் ஈவாய்
கனபொருள் தந்தே காப்பாய்.

## எம பயம் நீங்க

ஆய்ந்தனை சுபீச்வ ராய
அறிக சிரஞ்சீ வியானாய்
தோய்ந்தனை ராம பக்தி
துய்த்தனை அவரின் அன்பை
பாய்ந்ததோர் பக்தி யாலே
பரமனும் மகிழும் வண்ணம்
ஆய்ந்துநீ மார்பம் தன்னில்
அவருருக் காட்டிக் காக்க.

## நோய் நீங்க

கண்ணுறுசஞ் சீவி தன்னை
கையினில் எடுத்து வானில்
எண்ணிட அறியா வேகம்
ஏற்றுநீ இளையற் காத்தாய்
மண்ணிடை நோயில் வாடும்
மனபயம் உற்றோம் அப்பா
எண்ணிலாத் திறலின் வீர
அனுமனே எம்மைக் காக்க.

## சிறை பயம் நீங்க

காக்கும் உன்னை சித்தனுமே
கட்டிய நாக பாசமதை
போக்கினை சிறிய திருவடியே
பொடிப் பொடி யாகப் படையழிய
நீக்கிடு எமது சிறைப்பயத்தை
நினைவினில் கொள்க பெருமானே
ஏக்கம் இன்றி வாழ்ந்திருக்க
என்றும் காக்கப் பெருமானே.

## பல சித்தி ஏற்பட

பெருமான் உன்றன் திறமை பல
பெற்றாய் நீயும் பெரும் பேறாய்
ஒரு மான் பின்னால் ஓடியவர்
உனது தலைவர் உனையறிவார்
அரிதாம் பலவாம் சித்தியதை
அளித்தே எம்மைக் காத்திடுக
திருமால் தூதர் நீ ரென்றால்
திருவே தந்து காத்திடு.

## வியாபார லாபம் பெற

கந்த ருவரும் கொண்டாடும்
கலைநலம் யாவும் வாய்த்தவரே
எந்தத் தொழிலும் பலிதமுற
எமக்கருள் செய்க அனுமாரே
முந்தும் தமிழைக் கம்பருக்கு
மூட்டியே செயல்போல் எங்களுக்கு
இந்த நலமே தருவீரே
என்றும் எம்மைக் காப்பீரே.

## பெரும் பகை தொலைய

காப்பீர் எம்மைப் பகைதன்னில்
கடும்பகை கொள்ளப் பொறுப்பீரோ
காப்பம் தெய்வம் நீரன்றோ
கடிந்தீர் தசக்ரீ வனையன்று
தோப்பும் துறவும் அடைந்தீரே
துணையார் உமக்கு ஸ்ரீராமர்
காப்பீர் அனுமன் காப்பிருந்தால்
கனபகை அனைத்தும் தொலைந்திடுமே.

## காமம் நீங்க

மேதினி தன்னில் காமத்தை
மேன்மை கொண்டே தொலைத்தீரே
வாதினில் வெல்லும் வல்லமையீர்
வகையாய்ப் பேசும் சொல்லுடையீர்
ஆதலின் எல்லா வியாகரணம்
அனைத்திலும் சிறந்தீர் எங்களையும்
தோதுறக் காமம் நீக்கிடுக
தொல்லைகள் இன்றிக் காத்திடுக.

## தாய் மனம் குளிர

கடுவிரை காற்றின் மைந்தா
கண்டுனை அஞ்ச னாதான்
விடவரு அன்பு கொண்டே
வெகுநலம் பெற்றாளன்றோ
தடமதில் இலங்கை சென்ற
தனியொரு வீர எங்கள்
விடற்கரு தாயைக் காக்க
வெகுநலம் சேர்க்க ஐயா.

## போன பொருள் கிடைக்க

யாவரும் போற்றும் என்றும்
யாங்கணும் உள்ள செல்வா
மூவரும் போற்றும் உன்னை
முறையொடு பூசை செய்யின்
போனதோர் பொருளும் சேரும்
புதுப் பொருள் உடனே சேரும்
தீனபந் தென்றே உன்னைத்
தெளிந்தவர் சொன்னார் காக்க.

## கொடும் பகை அழிய

கண்ணுற்ற அரக்கன் தன்னைக்
கலக்கினை சொல்லால் வென்றாய்
புண்ணுற்ற நெருப்பி னாலே
புதைகுழி பலர்க்குச் செய்தாய்
எண்ணுற்ற செயல் முடித்து
ஏகினை ராமன் முன்னர்
மண்ணுற்ற எம்ப கையை
மாய்த்துநீ காக்க வேணும்.

## ஆணவம் ஒழிய

வேணும் பொருளை நீ தருவாய்
வெகுவாய் மனிதர் அதைப் பெற்றால்
தானும் அகந்தை கொண்டிடிலோ
தகர்ப்பாய் அதனை இதுஉண்மை
பேணும் காவல் இலங்கணியை
பெருமை யுடனே வென்றனைநீ
ஆணவம் தன்னை அழித்துவிடு
அதன்பின் காக்க எங்களையே.

## பால் பாக்கியம் ஏற்பட

ஏன்றதொரு கனிவிளையும் மலையில்
இருக்கின்ற பவழமல்லி வனத்தில்
ஆன்றதொரு பலாக்கனியை உடைத்து
அருஞ்சுளையை உண்கின்ற அனுமா
தோன்றுமொரு தூயவலாம் நீயே
துணைவருவாய் பால்பாக்யம் தருவாய்
வேண்டுமட்டும் வடைமாலை உனக்கே
விரும்புவண்ணம் சாத்துகிறோம் காக்க.

## கடன் தீர

காக்கின்ற மாருதியைக் கருது
கனியோடு வடைமாலை சாத்து
தீக்குன்றை வெண்ணையினால் சாத்து
திருத்துளவம் வெற்றிலையும் சாத்து
பூக்குன்றம் அன்னவனுமே காப்பான்
புகழ்கொண்ட அனுமனைநீ போற்று
தீய்க்கின்ற கடனதனைத் தீரு
திருவளர அன்னதானம் போடு.

## மனபயம் தீர

உம்மென்று விஜயன்தேர் இருந்து
ஹூங்காரம் செய்பவனைப் பாடு
பம்மி விடும் மனபயமும் கேளு
பாரிலொரு துயரமில்லை நாளும்
எம்பிறைவன் அனுமனென்றே கூறு
இதுநாளில் உடன்வருவான் பாரு
உம்மையவன் காத்திடுவான் உண்மை
உணர்கவிதை என்னாளும் நன்மை.

நன்மையே நல்கும் ஆஞ்சநேயனை வணங்கி னாலே
துண்ணெனச் சனியின் பீடை
தொடந்திடா தொழியும் இன்னும்
கண்ணினை நோக்கி னாலே
கடியகோள் துன்பம் எல்லாம்
மின்னலைப் போல மாயும்
மேன்மையும் சேரும் பாரேன்.

ஏனெனில் அனுமன் தந்தை
ஏன்றதோர் காற்றே யன்றோ !
மாணிக்கப் பருதி தந்த
மதிநலம் அனுமன் பெற்றான்
கேதுவும் ராகு தானும்
காற்றினை உண்ணும் கோள்கள்
ஆதலின் அவற்றின் தீமை
அகற்றிடும் அனுமன் அன்றோ. 36

அன்றொரு குன்றம் நின்று
அருங்கடல் தாண்டிச் சென்றோன்
என்றுமே துயரம் ஆகும்
இப்பெரும் பிறவி தன்னை

வென்றருள் செய்வான் நல்ல
வேந்தனாய் வாழ வைப்பான்
நன்றையே நல்கும் நம்பி
நலமதை நாளும் நம்பு. 37

நம்பியே சென்ற போதும்
நடந்திடாக் காரி யங்கள்
நம்பினால் அனுமன் தன்னை
நாழிகைப் போதில் நேரும்
அம்புனேர் கூர்த்த வேகம்
அருமலை கொண்டு சேர்த்தான்
நம்பினோர் கெடுவ துண்டோ
நாடுவாய் ராம தூதன். 38

தூதனாய் விரைந்த போதும்
தொல்லறம் நிறுவும் போதும்
வாதிடைப் பேசும் போதும்
வகுத்தவன் அறத்தை அன்பை
தீதினை நீக்கும் வள்ளல்
திருவினைச் சேர்க்கும் வீரன்
ஏதினித் துயரம் தானே
அனுமனை வேண்டி னாலே. 39

வேண்டுதல் நேர்ந்து நல்ல
வெற்றிலை மாலை சூட்டின்
வேண்டி நல்கும் வீரன்
வடைமாலை தன்னைச் சூட்டின்
தடையெலாம் நீங்கிப் போகும்
தமிழெனக் காப்போன் அப்பா
அடைவாக நன்மை நல்கும்
அனுமனைப் போற்று வாயே. 40

வாய்மையும் தூய்மை கொண்டான்
வள்ளலின் தூதன் ஆனாய்
நோய்மைகள் அவனால் நீங்கும்
நொடியினில் இன்பம் நேரும்
தோய்தயிர் மத்தைப் போல
சுழன்றிடும் ஏழை நெஞ்சே
ஆய்ந்துநீ அனுமற் போற்ற
அனைத்துமே அடையலா மே. 41

அடையலாம் எல்லாம் அந்த
அனுமனை எண்ணினாலே
தடையெலாம் நீங்கிப் போகும்
தரணியின் துன்பம் ஏது?
உடையதோர் கதையைக் கொண்டே

உயர்பலத் தகுரர் கூட்டம்
உடைத்தவன் வலியன் வீரன்
உன்னதன் வலியன் வீரன்
உன்னதன் கண்ணில் காப்பான். 42

காப்பதே கடமை ஆனான்
கடுவிசை கொண்டான் வேதம்
காப்பவன் போற்றும் வீரன்
கடியசூர்ப் பகைவன் கோலன்
கோப்புறும் நோயை நீக்கும்
குறையிலான் அனுமன் காப்பான்
மீப்புகழ் சேர்ப்பான் செல்வம்
மீண்டிடும் வண்ணம் காப்பான். 43

பான்மைகொள் வீரன் செல்வப்
பங்கய முகத்து நாதன்
ஆண்மையில் ஆற்றல் தன்னில்
அருமைகொள் கடிய வேகன்
நோன்மையின் முதல்வன் மூர்த்தி
மூண்டெழும் நெருப்பே போல்வான்
மாண்புக்கும் மாண்பாம் அந்த
மாருதி துயரம் தீர்ப்பான். 44

தீர்ந்திடும் துன்பம் கண்டே
தினம்தொழும் பக்தர் தாமும்
சார்ந்துபல் பூசை கொண்டு
சாதமும் பிறர்க்கு இட்டு
மிச்சலில் உருண்டு உன்னை
மேனியும் புளகம் கொள்வர்
அச்சமும் நீங்கி வாழ்ந்து
அனைத்துமே அடைவன் அன்றோ. 45

ஓங்காரம் செய்து நீயும்
உகந்தனை கொடியில் பார்த்தன்
தீங்கறப் போரில் வென்றான்
திருவினை நல்கும் வீரன்
ஏங்கிடும் பக்தர்க் காக
என்றுமே அனுமன் காப்பான்
நீங்கறும் நோயை நீக்கும்
நின்மலன் என்றும் காப்பான் 46

காண்க அனுமன் பெருமை
கண்ணியன் சீதையின் சோகம்
ஆண்டகை அவனால் அகலும்
அவன்புகழ் மனமே பாடு

வேண்டிய மாருதி நல்கும்
விந்தையை எண்ணுக நெஞ்சே
காண்டரும் தெய்வம் அனுமன்
கைகளே போற்றிக் குவிக்க. 47

கவினுறு காவினில் அலையும்
கவின்மிகு அஞ்சனை செல்வன்
புவியுறு காற்றின் மைந்தன்
புன்னகை ராமனின் தூதன்
தவியுறு போது அவனை
தவறாது நினைக நெஞ்சே
தவிர்ப்பான் துயரைப் பாராய்
தண்ணிழல் அவனே கேளாய். 48

கேளாய் சத்ரு நாசம்
செய்பவன் அனுமன் கேளாய்
வாளாய்ச் சிறந்த தூதன்
வாய்மை தூய்மை உள்ளான்
கோளால் வருபகை நீக்கும்
கொள்ளையன் மாருதி கண்டாய்
தானே பணிக நிதமும்
தயவுடன் அருள்வான் கனிவாய். 49

வாய்மை வீடணன் நண்பன்
வளர்புகழ் கொண்டோன் அனுமன்
தாய்மை மனத்தோன் அனுமன்
தருநிழல் எனவே வருவோன்
ஆய்க இதனை அனுமன்
அருமணி அனையன் பெருமை
தூய்மை மாருதி துணையை
துணிக மனமே வாழ்வாய் 50

வாய்மை உடனே தசக்ரீ
வன்குலம் சாய்த்தான் அனுமன்
நோய்மை அனுமன் நீக்கி
நுவலரும் நன்மை சேர்ப்பான்
நுண்மை உண்மை நுவலும்
நுண்ணறி வுடையன் தாளை
எண்ணுக நெஞ்சே நீயே
என்றுமுன் துணையது வாகும். 51

கும்ப கர்ணனைச் சாய்த்த
குறையில் இலக்குவன் நண்பன்
எம்பிக் குதித்தே வென்றோன்
எம்மரும் மாருதி கண்டாய்

நம்பி அவனைத் தொழுதால்
நடவா தவெல்லாம் நடக்கும்
அம்பே அனைய தூதன்
அவனது அடியினை வாழ்த்து. 52

வாழ்த்துக அனுமன் தன்னை
வஜ்ஜிர தேகம் பெற்றான்
ஆழ்த்துவன் தீமையை ஆழி
அருமைகள் சேர்ப்பான் வாழ்வில்
தாழ்த்திடும் வறுமையைத் தூர்க்கும்
தாரணி போற்றும் அனுமன்
வாழ்ந்திடச் செய்பவன் தாளை
வந்தனை செய்திடு மனமே. 53

மனமொடு வார்க்குக் காயம்
மற்றுள எல்லா அவனே
தினநினை பொருளாய் அவனே
திகழ்பவன் அவனோர் அருமை
இனமொடு ராமனின் தூதாய்
இலங்கையைச் செற்றவன் கண்டாய்
வனமுடை வள்ளல் உதயம்
வளர்புவி பெற்ற செல்வம் 54

செல்வச் சிரஞ்சீ விதன்னை
சேர்கரம் கூப்பித் தொழுவாய்
பல்வகைப் புண்ணியம் செய்தே
படைத்தவன் கோயிலில் வைத்து
சிலவகை மலர்களைச் சூட்டி
சிறக்கவே பூசைகள் புரிக
வெல்வகை அனுமன் அருள்வான்
வேறொரு கவலை இல்லை. 55

இல்லை எனும்சொல் இல்லா
இல்லற ராமனின் தூதன்
வல்லவன் வலிமை மிக்கும்
வகைதொகை உணர்ந்த சொல்லோன்
நல்லதோர் தெய்வம் அனுமன்
நாடிய நல்குவன் கண்டாய்
அல்லலில் அலையும் மனமே
அனுமனை என்றுமே வாழ்த்து. 56

வாழ்த்துக அனுமனை என்றும்
வாழ்ந்திடச் செய்வான் அவனே
ஆழ்த்துக வெண்ணையில் தைலம்
அருமணப் பொருள்தனில் அவனை

வீழ்த்துவன் உம்பகை விரைவில்
வீரமே அவனுரு தானே
தாழ்ந்திட அறியான் தாளை
தாழ்ந்திடு மனமே நீயே. 57

ஏவென ஏகுவன் வானில்
ஏன்றதோர் மலையுடன் வருவான்
தாவுவன் கடலைத் தையல்
தயங்கிடா வண்ணம் காப்பான்
காவெலாம் அலைகுவன் ஆனால்
கனகமே அவனென எண்ணு
புவியினில் அவன்போல் தெய்வம்
பொருவிலா தொன்றிலை நெஞ்சே. 58

நெஞ்சினில் ராமனை வைத்த
அஞ்சனை செல்வனைப் பாடு
அஞ்சுதல் அகற்றிடு வானே
ஆயிரப் புகழ்சேர்ப் பானே
துஞ்சுதல் ஏனோ மனமே
துணிவு டையோனைப் பாடு
தஞ்சம் அவன் திருத்தாளே
தணிந்து பணிகநீ மனமே. 59

## வீண் பழி ஏற்படாதிருக்க

மேன்மைகள் மாருதி தருவான்
மென்னகை ராமனின் தூதன்
கேண்மைகள் வாழச் செய்வான்
கீழ்மைகள் மாய்க்கும் கோலன்
ஆண்மைகொள் ஆதவன் மாணி
அவனடி பணிகுவை ஆயின்
வீண்பழி வந்திடா தொழியும்
வெற்றியும் புகழதும் சேரும். 60

சேர்ப்பவன் பெரும்புகழ் என்றும்
சீர்த்திகள் தந்திடும் செல்வன்
தீர்ப்பவன் பகையை தீமை
தீண்டிடா வண்ணம் காப்பான்
ஆர்ப்பவன் அருச்சுனன் கொடியில்
ஆண்டிடு சுக்ரீவன் தனக்கு
சூர்ப்பகை அமைச்செசன அமைந்து
சுந்தரன் நற்புகழ் பெற்றான். 61

பெற்றவர் போற்றும் பண்பாளன்
பெரியவர் தேடும் அருஞ்சீரன்
கற்றவர் போற்றும் கபியவனே
கரியவன் அரியவன் தூதானான்

நற்றவ முனிவனர் நாடிடவே
நடந்தனன் தாவினன் மாகடலை
கொற்றவன் இராவணன் குலைநடுங்கிக்
குமைந்திட வைத்தவன் மாருதியே. 62

## வறுமை அகல

மாருதி தன்னை வணங்கு
மாறிடும் வறுமை திண்ணம்
மாருதம் அனையன் அனுமன்
மட்டிலாச் செல்வமும் தருவான்
ஆறுதல் அவனே வஞ்சம்
அகற்றிடும் வீரனும் அவனே
தேறுதல் அடைந்திடு நெஞ்சே
தினகரன் மாணியைப் போற்று. 63

போற்றிடு அனுமனை என்றும்
புதுமலர் மணப்பொருள் கொண்டு
ஆற்றலில் வல்லான் சீரை
அருமையில் போற்றுக நெஞ்சே
காற்றுடை மைந்தன் காப்பான்
கற்பகமே எனவே தருவான்
சீற்றமோ டசுடரை வென்றான்
செந்தமிழ் இனியனைப் போற்று. 64

உன்னரும் புகழ்தனைப் பெருக்கி
உத்தமச் சீரினை நல்கும்
எண்ணமும் சிறப்புடை வீரன்
எழுதகு பெரும்புகழ் கொண்டோன்
பன்னகத் துவஜனின் பகைவன்
படையினில் ஓங்காரம் செய்து
நன்னலம் சேர்த்தவன் தாளை
நாடுக நெஞ்சே நாளும். 65

நாளொரு கோள்களின் தீமை
நமையணு காமலே காக்கும்
தாளினில் தண்டை அணிந்தே
தாந்தமி திமிதிமி என்றே
நாளினில் இலங்கையைச் சென்ற
நாயகன் அனுமனைப் பாடு
தாளிணை பணிந்திடத் தருவான்
தருகுவான் பலநலம் பெருமை. 66

பெருமை அருமை உடையானை
பெரிய பெருமான் தூதுவனை
அருமை உடனே வாழ்த்திடினே
அனைத்தும் அளிப்பான் மாருதியே
திறமை பலவும் படைத்தானை
திண்மை வீரம் உடையானை

மறவா திருப்பாய் மனமேநீ
மங்களம் தருவான் மாருதியே. 67

ஏற்றமே தருவான் என்றும்
ஏக்கமும் தீர்த்து வைப்பான்
மாற்றமே இல்லா நெஞ்சின்
மாருதி காத்து நிற்பான்
கூற்றமும் என்ன செய்யும்
குளிர்மனம் கொண்டோன் தன்னைப்
போற்றிடின் அனைத்தும் வாய்க்கும்
புன்னகை கொள்வாய் நெஞ்சே 68

சேய்மை அண்மை தன்னில்
சேர்ந்திடு துன்பம் தீர்ப்பான்
தூய்மை உடலம் பெற்றான்
துணிவொடு கருமை பெற்றான்
வாய்மை பிரமச் சரியம்
வகையுணர்ந் ததனைக் காத்தான்
தீய கோள்களின் தீமை
தீய்ப்பான் மாருதி தானே. 69

தானெனும் எவனையும் அண்டி
தகுவலி அழித்திடும் சனியின்
தீமையைக் களைந்திடு வானே

திருமிகச் செய்திடு வானே
ஏனெனில் ஆதவன் மாணி
சனியனின் தோழனும் ஆவான்
ஏனெனில் மார்கழி மூலம்
ஏற்றவன் திசையெனக் கேது 70

கேதுபோல் கெடுப்பா ரில்லை
கிளர்ந்தசொல் நாமும் கண்டோம்
கேதுவின் காலில் தோன்றிக்
கீர்த்திகள் அனுமன் சேர்த்தான்
ஆதலின் தீய கோட்கள்
ஆக்கிடும் தீமை எல்லாம்
மாருதி நீக்க வல்லான்
மனதினில் கொள்ளு வாயே 71

வாய்மையும் உண்மையும் காத்த
வரதனின் தூதன் தன்னை
தாய்மைக்குத் தாய்மையான
தயவினை எண்ணு நெஞ்சே
தூய்மைகொள் பகுதி போற்றும்
துரித மாருதத்தின் செல்வன்
ஆய்கநீ அவனை வாழ்த்து
அனைத்துமே பெறலாம் உண்மை. 72

உண்மை நல்கும் உத்தமனை
உயர்வை நல்கும் சத்தியனை
நன்மை நல்கும் நாயகனை
நலமே நல்கும் மாருதியை
எண்ணித் தொழுக மனமே நீ
ஈசனும் போற்றும் அனுமனையே
எண்ணினை எனிலே இன்பமதாம்
எல்லா நலமும் வாய்த்திடுமே. 73

திடுமென வருமோர் துயரம்
தீண்டிடா வண்ணம் காக்கும்
அடுதிறல் அனுமன் தன்னை
அனுதினம் நினைவாய் நெஞ்சே
கெடுதிகள் நீக்கும் செல்வன்
கீழ்மைகள் அகலச் செய்வான்
சடுதியில் வந்தே வாழ்த்தும்
சற்குணன் அனுமான் தானே. 74

பாய்புலி போல்வான் கண்டாய்
பலநலம் சேர்ப்பன் அனுமன்
ஆய்ந்தவன் அனைத்தும் வாழ
அவனுன் றன்நன் துணையே

காய்ந்தவன் இலங்கை மண்ணைக்

கலக்கினன் ஒரு நாள் வென்றான்

ஆய்ந்துநீ சென்று வந்தால்

அனைத்துமே நல்கும் வீரன். 75

வீரனை வீரர்க் கெல்லாம்

விரகனை ஒருவன் தன்னை

மாருதி என்ற பேரால்

மணிக்குரல் சேர்ப்பான் தன்னை

காரியம் தன்னைக் காக்க

கருதிடில் காப்பான் உன்னை

ஆரியன் அசுரர்ச் சென்ற

அனுபவம் அவற்கே உண்டு. 76

உண்டெனில் என்றும் உண்டு

உயிர் அனு மனுமே காப்பான்

நன்றெனில் என்றும் நன்மை

நடத்துவன் கார ணத்தான்

அன்றெனில் அவனைப் போல

அல்லலைத் தருவோன் இல்லை

நன்றினில் நன்மையான

நல்அனு மனேதான் காப்பான். 77

பான்மையுள் சிறந்தோர் போற்ற
பன்னலம் அவர்கள் வாழ்த்த
நோன்மை கொள் அனுமன் தானும்
நோன்றவன் அதனால் வாழ்த்து
ஆண்மையில் வல்லோன் தன்னை
அனுமனை என்றும் வாழ்த்து
கேண்மையில் கிளர்க்கும் வீரன்
கிங்கரர் போற்றும் தீரன். 78

தீரனை திலகன் தன்னை
தெளிதமிழ் அறிந்தோன் தன்னை
மாறனைத் தடிந்தவன் போற்றுகிற
மாருதி தன்புகழ் பாடுகிறேன்
ஆறென வந்தவன் அவனேயென்
அணிநலம் தந்தவன் அவனேதான்
மாறிடும் வாழ்வினில் மாருதியே
மாருதம் எனவே வருவான காண். 79

காண்பதில் என்ன நன்மை
கண்ணுதல் அறிந்த உண்மை
பூணணி நாகம் போர்த்தும்
புங்கவன் சிவனும் போற்றும் -

மானியை அனுமன் தானும்
மயங்குறா வண்ணம் காக்கும்
ஆணியை அனுமன் தன்னை
அணிகநீ மனத்தில் மாதோ ! 80

மாதினைப் பாகம் பெற்றான்
மங்கலன் சிவனார் போற்றும்
ஆதியைக் காற்றின் செல்வன்
அஞ்சனை மைந்தன் தன்னை
நீதிகொள் இறைவன் தன்னை
நித்தியம் அருள்செய் வானை
மாதரில் சிறந்த சீதை
மகிமையை உணர்த்து வானே. 81

ஏனெனும் கேள்வி இல்லை
எழுதரு பொருளே இல்லை
தானெனும் அகந்தை நீக்கும்
தண்ணிழல் அனுமன் தன்னைத்
தூணென நினைத்தால் வாழ்வாய்
துயரேதும் அண்டா தப்பா
வீணென வந்தோர் எல்லாம்
விரைகுவர் அனும னாலே. 82

ஏவென விரைவான் எங்கள்
எங்களின் அனுமன் என்றும்
தாயென வருமோர் வீரன்
தண்ணிழல் அவனே அந்தத்
தூயவன் அனுமன் என்ற
துரியனை உலகம் போற்றும்
ஆயவன் அனைத்தும் சேர்ப்பான்
அனுமனே காப்பான் மாதோ ! 83

மாதினைப் பாகம் வைத்தான்
மன்மதன் தன்னைச் செற்றான்
போதினில் வாழ்வான் தன்னைப்
பொன்றிட வைத்தான் தெய்வம்
ஆதியை அறிவைப் பேற்று
அவனுரு அனுமன் தானே
நீதியில் நீதியான நின்மலன்
நினைக் காப்பான். 84

காப்பான் அனுமன் எந்நாளும்
கருணைக் கடவுள் அவனாகும்
தீய்ப்போன் எதையும் இலங்கையிலே
திறல்கொள் வீரன் அனுமனுமே

மேய்ப்போன் ஒருவன் அவன் தெய்வம்
மேதினி போற்றும் மாருதியே
தீய்ப்பாய் தீமை பகைமையினை
தேர்க அவனை மனமே நீ 85

நீயும் அவனும் ஒன்றன்றோ !
நினைவும் அவனே கருத்தொன்றே !
ஆயும் புலவன் அவனன்றோ !
ஆதவன் மாணி அவனன்றோ
நோயை நீக்கும் அனுமனை நீ
நுணுகி உணர்வாய் அதுகதியே
வாய்மை தவறா மாருதியை
வகையுடன் தொழுவாய் நீதினமும் 86

உம் அனு மானே காத்திடுவான்
உனக்கொரு வழியைக் காட்டிடுவான்
கொம்மெனும் கானம் தன்னிலொரு
குரலுடை மாருதி பணி செய்வாய்
தம்முடையச் செல்வம் தந்தவனின்
தாரணி விளங்கச் செய்பவனை
எம்மையும் இருமையும் ஒருமைகொள
ஏன்ற எம்மாருதி காத்திடுக. 87

கண்ணருள் தருவான் அனுமானே
கருதும் பொருளைத் தருவானே
எண்ணிடா அருளை நல்கிடுவான்
இவனே முதல்வன் ஒருவன்தான்
நண்ணிடா துயரும் தீமையெதும்
நலமே தருவான் மாருதியே
புண்ணியன் திருவடி போற்றுகவே
புனிதன் காப்பான் உன்னையுமே. 88

நைந்தாய் பலநாள் நாடினையோ !
நாளும் புகழே படைத்தனையோ !
ஐந்தாய் உள்ள புலன்வென்றான்
அனைத்தும் அறிந்தான் மாருதியே
எந்தாய் என்றே அஞ்சனையே
ஏன்ற பெருமான் வாழ்ந்திடவே
கொந்தார் சோலை வனமெல்லாம்
கொள்ளும் மாருதி வரம் தருவான். 89

முதலும் அனுமன் என்னாளும்
முதலாய் வருவான்; வழிபட்டால்
சொந்தம் அவனே அவனின்றிச்
சொர்க்கம் ஒன்று வேறில்லை

சந்தம் மிகுமலர்க் காவுறையும்
கண்ணெனும் அனுமன் தாள்போற்றின்
வந்த வினைகள் நீங்கிடும்
வருவினை நல்வினை ஆகிடுமே. 90

மேதினி புகழும் மேன்மையான
மேலாம் புயவலி கொண்டவனை
தூதென விரைந்த தூதுவனை
துணையென என்றும் ஆனவனை
வாதினில் வல்ல வலிமையனை
வருதுயர் நீக்கும் வன்மையனை
போதுமெப் போதும் வணங்கிடுவாய்
புன்மைகள் நீக்கி வரம் தருவான். 91

வானவர் போற்றும் வல்லவனை
வாலினில் பகையைச் செற்றவனை
ஊனமில் பிரமச் சரியத்தை
உன்னத மாகக் கொண்டவனை
ஈனமில் இன்பம் தருபவனை
என்றும் நினைக மடநெஞ்சே
வேணும் நன்மைகள் விளைந்திடுமே
விந்தை யாவும் நிகழ்ந்திடுமே. 92

நிகழ்ந்திடும் செயல்கள் யாவிலுமே
நினைக மாருதி துணைத்தாளை
நிகழ்ந்திடும் நற்பலன் நிலைத்திடுமே
நிகழ்ச்சியும் நினைவும் அவனன்றோ
நீங்கா இன்பம் நல்குவனே
நிச்சயம் துணையாய் வருவானே
தீங்கே தவிர்க்கும் தெய்வத்தை
தெளிந்து கொள்க மனமே நீ. 93

மனமே நீ துயர் கொள்ளாதே
மாருதி கோள்பகை நீக்கிடுவான்
சனி தரும் துயரம் களைவானே
சங்கடம் யாவும் தீர்ப்பானே
புனிதன் கேதொடு ராகுதரும்
பொல்லாங் கொழிப்பான் சீரஞ்சீவி
இனிய கனிகள் பால்பழத்தை
இவர்க்க அளிக்கின் பெருநன்மை. 94

நன்மை அடைய வேண்டுமெனில்
நாடுக மாருதி திருத்தாளை
உண்மை நல்லறி வினையடைய
உன்னத அனுமனைப் போற்றிடுக
வெண்ணை சாற்றி வெற்றிலையால்
வேண்டிய மாலை சாற்றிடுக

வண்மை வன்மை தான் பெறவே
வடைமாலை சாற்றிப் போற்றிடுக. 95

இடுக குங்குமம் அருச்சனைகள்
இன்கனி படைத்து மகிழ்வோடு
விடுக பயத்தை மாருதியுன்
வேதனை தவிர்ப்பான் விரைவாக
அடுதிறல் வீரன் அனுமனுனை
அகலாதென்றும் காத்திடுவான்
சடுதியில் அருளும் வள்ளலினை
சற்குணன் தன்னைப் பணிவானே. 96

வாயு குமாரன் உன்றனது
நோயினை என்றும் நீக்கிடுவான்
ஆயும் செஞ்சொல் வல்லவனை
அனுதினம் மனதில் போற்றிடுவாய்
பாய்புலி என்ன வீரனவன்
பன்னலம் சேர்க்கும் தீரனவன்
வாய்மை வடிவே அனுமனென
வல்ல நெஞ்சே வாழ்த்தாயே. 97

தாயாய் அஞ்சனை ஈன்றெடுத்தாள்
தருவாய் அனுமன் காத்திடுவான்

நோயாய் வந்த தீவினையே
நுணுகித் தீர்க்கும் நுண்மையனை
வாய்மை தவறா வலியவனை
வாழ்த்துக நெஞ்சே பலகாலும்
தூய்மை அனுமன் காத்திருப்பான்
துளிர்த்திடும் இன்பம் பலநாளும். 98

நாளும் கோளும் என் செய்யும்
நமனார் கொடுமை என் செய்யும்
வாளாய் வந்தே பகைநீக்கும்
வலியன் அனுமன் காத்திருப்பான்
தேளின் கொடுக்காம் துன்பமெலாம்
தீரும் அவனின் அருளாலே
தோளில் வலிமை கொண்டோனைத்
துணிவாய் மனமே வாழ்த்திடுக. 99

கண்ணுதல் போற்றும் கனகத்தை
கரியவன் போற்றும் அமுதத்தை
எண்ணரு சிறப்பின் மாருதியை
இறையை அவனை எண்ணிடிலோ
புன்மைகள் தீரும் பாவங்கள்
பொக்கெனத் தொலையும் ஓர்கணத்தே
நன்மைகள் சேர்க்கும் நாயகனை
நாளும் வாழ்த்துக மனமேநீ. 100

நீள்புயம் தன்னை நினைந்திட்டால்
நெருங்கா பகையும் நினைந்திடுக
தாளின் தண்டை தனை நினைக்க
தகுபலம் வாய்க்கும் மனதினிலே
வாலின் சுழற்சி தனை நினைந்தால்
வளம்பல வாய்க்கும் வாழ்வினிலே
தாளினை தனையே நினைந்தாலே
தாங்கொணா நோய்பயம் தீர்ந்திடுமே 101

தீரன் தன்னை நினைத்தாலே
தெளிவுடை அறிவும் திருவாய்க்கும்
வீரன் மாருதி தனைநினைக்க
வெல்வகை அருள்வான் என்னாளுன்
சூர்ப்பகை சுந்தரன் மனமிருந்தால்
சொன்னமும் வைரமும் உடன் சேரும்
ஆர்த்திடும் ஆஞ்ச நேயனைநீ
அகமே இறுத்து நலமாமே. 102

ஆம் ஆம் அனுமன் துணையிருப்பான்
அரியின் தூதன் ஆனாலும்
ஓம் ஓம் என்றே துதிப்போரும்
உயர்வாய் அவனைப் போற்றிடுவாய்
ராம் ராம் என்றே உரைப்பவனை
நாளும் சிந்தை கொண்டாலே

தோம் தோம் என்றே மனமுவந்து
துயர்களை நீக்கி அருள்வானே. 103

வானில் மிதந்தே பறந்திடுவான்
வாயுவின் மகனும் அவனன்றோ
கானில் திரிவான் ராமனுடன்
கடும்பகை நீக்கி முடிதருவான்
தேனும் தினை பலகனியும்
தெளிந்தே உண்பான் திருத்தாளை
வேணும் வரத்தைப் பெற்றிடவே
விரைந்தே பற்றுதல் நலமாமே 104

ஆமே நலமாய் அனுமனையே
அனுதினம் சிந்தை செய்வதனால்
தீமை அமலும் திருவாய்க்கும்
தெளிவும் பலமும் நேர்ந்திடுமே
ஆமை புகுந்த வீடெனினும்
அருந்துயர் நேரா தகன்றிடுமே
பூமியில் என்றும் சீரஞ்சீவி
புனிதனை அனுமனைப் போற்றுகவே 105

போற்றுக அனுமன் பொற்பாதம்
பொடிப்பொடி ஆகும் நோய்க்கொடுமை

ஏற்றுக தீபம் மணிவிளக்கு
ஏன்றன நல்கி இறைவனுக்கு
மாற்றுதல் அறியா வாய்மையினான்
மண்டிடும் பெருநிதி அருள்வான் காண்
ஆற்றலின் வல்ல அனுமனைநீ
அனுதினம் நினைக மடநெஞ்சே 106

நெஞ்சம் உவப்ப இலங்கையினை
அஞ்சனைச் செல்வன் அலைவானே
நெஞ்சம் உவப்பச் சீதையினைச்
ஸ்ரீராம் ஆழி தருவானே
கஞ்சம் நிறைந்த இலங்கையினை
கனிவால் நெருப்பில் இடுவானே
வஞ்சனை அரக்கர் வீறொழிய
வைத்தவன் அவனைப் பாடுகவே. 107

வேகம் நிறைந்தான் விண்ணதிர
விவேகம் உடனே விரைவானை
ஆகம் வஜ்ஜிரம் ஆனவனை
ஆதவன் மாணி அனுமனை நீ
அகமே இருத்தி நினைப்பாயேல்
அனைத்து இன்பம் தானடைவாய்
இகமும் பரமும் அவனேகாண்
இனியநம் மாருதி வாழ்த்துகமே. 108

# ஸ்ரீ ஹனுமத் லாங்கூலாஸ்த்ர ஸ்தோத்ரம்

## சத்ரு ஜெய துதி

1. ஹே அனுமாரே அஞ்சனையின் மகனே ! அதிபல பராக்ரமம் உடைய உம்முடைய ஆடுகின்ற வாலாகிய அஸ்த்திரத்தால் என் சத்ருக்கள் எல்லோரையும் அடித்துத் தள்ளும்.

2. குரங்குகளுக்கெல்லாம் தலைவரே, சூர்ய மண்டலத்தை விழுங்கச் சென்றவரே. ஆடுகின்ற வாலாகிய அஸ்த்தரத்தைப் பிரயோகித்து என்னுடைய சத்ருக்களை அடித்துத் தள்ள வேண்டும்.

3. அக்ஷய குமாரனை அழித்த பிரபோ ! மஞ்சள் நிறமுள்ள கண்களை உடையாய் ! அசுரர்களின் உயிரை நாசம் செய்கின்றவரே, ஆடுகின்ற உமது வாலால் எனது சத்ருக்களை நாசம் செய்து தள்ளும்.

4. பரமசிவனுடைய அவதாரமாக இருப்பவரே. ஸம்சார துக்கமாகிற சமுத்திரத்தில் இருந்து கரையேற்றுகிறவரே. ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்கள் யாவரையும் அடித்துத் தள்ளும்.

5. ஸ்ரீ ராமனுடைய சரண கமலத்தில் தேன் குடிக்கும் வண்டு போன்ற மனதை உடையவரே உம்முடைய ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்கள் யாவரையும் அடித்துத்தள்ளும்.

6. வாலியினால் அடிபட்ட சுக்ரீவனை பாதுகாத்த ப்ரபுவே, ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்கள் யாவரையும் அடித்துத்தள்ளும்.

7. சீதையின் பிரிவாகிய துக்க சமுத்திரத்தில் மூழ்கிய ஸ்ரீ ராமனை கரையேற்றியவரே, உமது ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்கள் யாவரையும் அடித்துத்தள்ளும்.

8. இராவணனுடைய பிரதாபம் என்கிற நெருப்பினால் எரிந்த உலகத்திற்கு மழைத் தாரையாக இருப்பவரே, ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்கள் யாவரையும் அடித்துத்தள்ளும்.

9. அகில உலகத்து நன்மைக்கு தீங்கு செய்யும் ராக்ஷஸகர்களாகிய கடலுக்கு மந்திர மலையாக இருப்பவரே, ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்கள் யாவரையும் அடித்துத்தள்ளும்.

10. வாலின் நுனியாகிய பூங்கொத்தில் பல வீரர்களை சுருட்டியவரே சத்ருவின் பட்டினத்தில் தீ வைத்தவரே, ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத்தள்ளும்.

11. உலகத்தில் உள்ளவர்காளல் மனதினால் கூட தாண்ட முடியாத அபாரமான சமுத்திரத்தைத் தாண்டியவரே. உமது ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத்தள்ளும்.

12. நினைத்த மாத்திரத்தில் கோரிய எல்லாப் பொருள்களையும் கொடுப்பவரே, நமஸ்கரித்தவர்களிடம் அன்பு கொண்டவரே. உமது ஆடும் வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத்தள்ளும்.

13. ராக்ஷஸகர்களாகிய இருள் சூழ்ந்த ராத்திரியை போக்குவதில் சூர்யனாக இருப்பவரே ஆடுகின்ற வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ள வேண்டும்.

14. சீதையினுடையவும் ஸ்ரீராமனுடையவும் அன்பிற்குப் பாத்திரமானவரே, சத்ருக்களை தவிக்கச் செல்கின்றவரே, ஆடும் அஸ்த்திரமாகிய வாலால் எனது சத்ருக்களை அடித்துத்தள்ளும்.

15. பீமன் முதலிய மஹா பயங்கர வீரர்களின் சக்தியை அடைந்து அவதாரம் செய்தவரே. உமது ஆடுகின்ற வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ள வேண்டும்.

16. சீதையைப் பிரிந்து வாடிய இராமனின் கோபத்தின் உருவாக நிற்பவரே, உமது ஆடுகின்ற வாலால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ளும்.

17. வஜ்ராயுதம் போன்ற அங்கங்கள் நகங்கள் தித்திப் பற்கள் உடையவரே. இந்திரனுடைய வஜ்ராயுதத்தை வீணாக்கியவரே. உமது வாலால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ளும்.

18. மிகுந்த கர்வங்கொண்ட கந்தவர்கள் வசிக்கின்ற மஹேந்த பர்வதத்தை பிளக்கின்ற சிம்ம நாதத்தை உடையவரே. உமது வாலாகிய அஸ்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ளும்.

19. லக்ஷ்மனுடைய உயிரை ரக்ஷித்ததால் சூர்ய வம்சத்தைக் காத்தவரே. உமது ஆடுகின்ற வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ளும்.

20. ராமனுடைய பிரிவினால் துயரம் கொண்ட பரதன் முதலியவர்களுடைய மனக் கவலையை போக்கியவரே, உமது

வாலாகிய அஸ்த்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ளும்.

21. ஔஷதி மலையை தூக்கி வந்ததால் சத்ருக்களின் மகிமையைப் போக்கியவரே, உமது வாலால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ளும்.

22. சீதையின் ஆசீர்வாதத்தினால் அஸ்திர உபாதை இல்லாமல் ஆகிய ஆஞ்சநேயரே ! ஆடும் வாலாகிய அஸ்திரத்தால் எனது சத்ருக்களை அடித்துத் தள்ளும்.

*சத்ரு ஜெயத்தைக் கொடுக்கும் இந்தத் துதியை எவன் அரச மரத்து அடியில் இருந்து படிக்கிறானோ அவன் சீக்கிரத்தில் ஆஞ்சநேயரின் ப்ரஸாதத்தால் சத்ருக்கள் அற்று ஆனந்தத்தை அடைகிறான்.*

★ ★ ★

ஸ்ரீராம ஜெயம்

## பக்த துளசிதாசர் அருளிய

# அனுமான் சாலீஸா

எனது மனம் என்னும் கண்ணாடியை ஸ்ரீ குருதேவரின் திருப்பாதத் தூசியால் தூய்மைப் படுத்திக் கொண்டு நான்கு வித புருஷார்த்தங்களைத் தருகின்ற ரகுகுலத் திலகமான ஸ்ரீ ராமனின் களங்கமற்ற புகழை விளக்கத் தொடங்குகிறேன்.

எனது அறிவோ குறுகியது. வாயுமைந்தனான ஆஞ்சநேயா, உன்னைத் தியானிக்கிறேன். எனக்கு வலிமை அறிவு , உண்மை, ஞானம் எல்லாம் தருவாய். என்னைத் துன்பங்களில் இருந்தும் தவறுகளில் இருந்தும் விடுவிப்பாய்.

★ ★ ★

1. அறிவும் ஆற்றலும் பொருந்திய, கடலைப் போன்ற ஓ ஆஞ்சநேயனே ! மூன்று உலகங்களையும் ஒளி பெறச் செய்யும் அனுமாரே ! உனக்கு ஜயமுண்டாகுக.

2. நிகரில்லாப் பலம் பொருந்திய ராமதூதனே ! அஞ்சனையின் மகனே ! வாயு புத்திரன் என்னும் பேரைக் கொண்டவனே.

3. மஹா வீரனே ! விக்ரம ஸ்வரூபனே ! வைரம் போன்ற தேகம் உடையவனே ! துர்புத்தி நீக்கி நற்புத்தி அளிப்பவனே !

4. தங்கம் போல பிரகாசிக்கும் தேகமுடையவனே ! காதுகளின் குண்டலம் தரித்திருப்பவனே ! அதிக கேசத்தை உடையோனே!

5. வஜ்ரம் போன்ற கையில் த்வஜத்தை வைத்திருப்பவனே ! தோளில் மாலையும் பூணூலும் தரித்திருப்பவனே !

6. சிவபுத்திரனே (சிவனின் வீர்யத்தில் பிறந்தவன்) கேசரியின் தவத்தால் வந்தவனே ! பிரசித்தியானவனே ! எல்லா உலகத்தோராலும் வணங்கப்படுபவனே !

7. அறிவாளியே நற்குணங்கள் பொருந்திய சாதுர்யனே ! ராம காரியத்தைச் செய்வதில் ஆர்வம் கொண்டவனே !

8. ஸ்ரீராம சரிதத்தை சதா கேட்கும் ரசிகனே ! ராம லக்ஷ்மண சீதை மூவரையும் மனதில் சூடிவைத்திருப்பவனே !

9. நீ சீதைக்கு சூக்ஷ்ம ரூபம் காண்பித்தாய் ! பெரிய ரூபம் கொண்டு இலங்கையை எதித்தாய் !

10. பயங்கர ரூபம் கொண்டு அசுரர்களை ஸம்ஹரித்தாய் ! ராமச்சந்திர மூர்த்தியின் பணியை நிறைவேற்றினாய் !

11. சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து லக்ஷ்மணனை பிழைக்க வைத்தாய் ! அதனால் ஸ்ரீராமன் சந்தோஷப்பட்டு உன்னைத் தன் மார்போடு அணைத்து ஆலிங்கனம் செய்து கொண்டான்!

12. ஸ்ரீராமச் சந்திர மூர்த்தி உன்னை மிகவும் புகழ்ந்து, சகோதரனே எனக்கு நீயும் பரதனுக்கு சமமானவன் என்று கூறினார்.

13. ஸ்ரீராமன் உன் கீர்த்தியை ஆயிரம் வாயால் பாடி உன்னை ஆலிங்கனம் செய்து கொண்டான்.

14. ஸனகாதி முனிவர்கள், பிரம்மாதி தேவர்கள், முனிகள், நாரதர், சரஸ்வதி, ஆகிசேஷன்.

15. யம குபேரர்களும், திக் பாலகர்கள், கவிகள் பண்டிதர்கள் யாராயினும் உன் புகழை என்ன செய்ய முடியும்.

16. நீ சுக்ரீவனுக்கு உபகாரம் செய்தாய், ராமனுடன் தோழமை செய்வித்து ராஜ பதவியை பெற்றுக் கொடுத்தாய்.

17. உன் ஆலோசனையை விபீஷணன் அங்கீகரித்து இலங்கைக்கு அரசனான விடயம் உலகமெல்லாம் அறிந்ததே.

18. ஆயிரம் யோஜனை தூரத்திற்கு மேலுள்ள சூரியனை நீ இனிப்பான பழம் என்று நினைத்தாய்.

19. ஸ்ரீராம முத்ரிகையை (கணையாழி, மோதிரம்) வாயில் வைத்துக் கொண்டு சமுத்திரத்தைக் கடந்தாய் என்று சொல்வதில் என்ன ஆச்சரியம்?

20. உலகத்தில் கஷ்டமான காரியங்களெல்லாம் உன் அனுக்கிரகத்தால் சுலபமாக நிறைவேறும்.

21. ஸ்ரீராம த்வாரத்தை (கோட்டையை, ராஜ்யத்தை) நீ காவல் காப்பாவன். உன் அனுமதியில்லாமல் யாரும் உள்ளே செல்ல முடியாது.

22. உன்னைச் சரணடைந்தால் எல்லா சுகங்களும் கிடைக்கும். நீ ரக்ஷகனாக இருக்கும் வரை யாரும் அஞ்சவேண்டியதில்லை.

23. உன் கீர்த்தியை நீயே அறிவாய். உன் குரலைக்கேட்டால் மூவுலகும் நடுங்கும்.

24. மஹாவீரனே உன் நாமத்தைக் கேட்டால் பூதங்களும் பிசாசுகளும் அருகில் நெருங்காது.

25. வீர ஆஞ்சநேயனே உன் நாமத்தை சதா ஜெபம் செய்வதால் சகல வியாதிகளும் பீடைகளும் நீங்கும்.

26. உடலாலும் உள்ளத்தாலும் சதா யார் ஆஞ்சநேயரை தியானித்து பூஜிக்கிறார்களோ அவர்களுடைய கஷ்டங்களை நீக்கி அவர்களைக் காப்பான்.

27. ஸ்ரீராமனுக்கு மகுடமாகவும் தபஸ்விகளுக்கு பிரபுவாகவும் விளங்குபவன் நீ. ராமனுடைய சேவைகளை எல்லாம் நீ செல்வனே செய்பவனாவாய்.

28. உன்னைத் தொழும் யார் மனதில் என்ன வேண்டுதல் இருந்தாலும் அவர்களுக்கு ஜீவன பலன் கண்டிப்பாக கிடைக்கும்.

29. உன் புகழ் நாலு யுகங்களிலும் உள்ளதென்ற விசயம் பிரசித்தமானதே. அதனால் உலகம் பிரகாசித்தது.

30. சாது சந்தர்களை நீ ரக்ஷிக்கிறாய். அசுரர்களைக் கொன்று ராமனுக்குப் பிரியமாவனானாய்.

31. அஷ்ட சித்தியும் நவநிதியும் கொடுக்கும்படியான வரத்தை உனக்கு ஜானகி மாதா அருள் புரிகின்றாள்.

32. ராம ரசாயணம் உன்னிடம் உள்ளது. நீ ஸ்ரீராம சந்திரனுக்கு மிகவும் வேண்டிய தாசனாவாய்.

33. உன்னை (நாம்) பூஜித்தால் ராமனுக்கு பராமனந்தம் உண்டாகும். அதனால் ஜன்ம ஜன்மாந்திர துக்கங்களை மறக்கச் செய்கிறார்.

34. எங்கு பிறந்தாலும் அவர்கள் ஹரி பக்தர்கள் எனப்படுவார்கள். அந்திம காலத்தில் ஸ்ரீராமனிடத்திற்குச் செல்வார்கள்.

35. ஒரு மனதுடன் ஹனுமாரை சேவித்தால் அவன் ஸர்வ சுகங்களையும் அளிப்பான்.

36. பலமும் வரமும் பொருந்திய ஹனுமானை நினைத்தால் சங்கடங்களெல்லாம் தீரும். பீடைகள் நசிந்துப் போகும்.

37. ஹனுமந் பிரபுவுக்கு ஜெயங்கள். ஸ்ரீகுரு தேவரைப் போல் கருணை செய்வாயாக.

38. இதை யார் நூறு முறை படிக்கின்றார்களோ அவர்களுக்கு பந்தனங்கள் நீங்கி மஹாசுகம் உண்டாகும்.

39. ஹனுமான் சாலீஸா என்னும் இந்த ஸ்தோத்திரத்தை யார் படிக்கிறார்களோ அவர்களுக்கு பார்வதி பரமேஸ்வரர் சாட்சியாக சித்தியுண்டாகும்.

40. துளசிதாசர் எப்பொழுதும் ஹரிதாசரே ! ஓ ! நாதா என் இதயத்தில் நீ என்றும் இருப்பாயாக.

*கஷ்டங்களை நீக்குபவனும் மங்கள ஸ்வரூபத்தை உடையவனுமான வாயு புத்திரனே சீதா ராம லக்ஷ்மண சகிதமாகவும் எல்லா தேவர்களேடும் நீ என் இதயத்தில் இருப்பாயாக.*

ஓம் பூர் புவஸ் ஸ்வாஹா
தத்ஸ் சவிதுர் வரேன்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தீ யோயோன ப்ரசோதயாத்

ஓம் நமோ, ஹரி ராம தூதா ஆஞ்சநேயா, அதிபல, பராக்ரம்ம சூரா, அண்டரண்ட, பகிரண்ட சண்டப்பிரன்ட உத்தண்ட கோலாகலா,

அகோர சத்ரு சம்ஹாரா, வரமருள் க்ருபா தயாளா
சிவ சிவ யோகாசனப்ரியா, வாயு குமாரா, சீதா லஷ்மி
ஸுதா! ஸுதா!
சாய பராக்ரம்ம விஷ்வரூபா

ஓம்கார, ஆம்கார, ஹ்ரீம் கார சஞ்சீவராயா, சர்வ மோட்ச கரணா, சஹஸ்ர நாம, அலங்ருத பூஷணா, ப்ரும்ப வரப்ரகாச, நிகூலா, ப்ருண்ட காலருத்ரா,
பக்தி விஷ்வாச சுத்த சுசீகரா, சுக்ருத குணசீலா
அம்ருத கலைஞான, பரமாத்மா, பாப விமோசனா.

பம் பம் பம் ரரர ரிரிரி நமசிவாய ஹனுமந்தா மம வசி வசீஸ்வாறா

ஓம் தாஸரதாய வித்மஹே ஸீதா வல்லபாய தீமஹி
தந்தோ! ராமப் ப்ரோசயாத்

ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே, வாயு புத்ராய தீமஹி

ஜெய் ஜெய் ஜெய் ஹனுமான், கோஜாயி
க்ருபாகரோ, குருதேவ, கீநாயி!

# ஸ்ரீராம ஜெய ஸ்தோத்ரம்

| | |
|---|---|
| அன்பர்கள் இடரை அகற்றிட வேண்டி அயோத்தியில் வந்தது | ராம ஜெயம் |
| அசுரரை ஒழித்து அறம் தழைத்தோங்க அமைதியளித்தது | ராம ஜெயம் |
| ஆதவன் மரபில் அழகிய உருகொண்டு அவதரித்தது | ராம ஜெயம் |
| ஆரணங் கமழும் வேத மாமுனிவன் அருளைப் பெற்றது | ராம ஜெயம் |
| இருள் வடிவான அலகையைக் கொன்று மருள் ஒழித்தது | ராம ஜெயம் |
| இருடியின் மகத்தை இலங்குவனோடு இமைபோல் காத்தது | ராம ஜெயம் |
| ஈசனை ஒத்த கௌதமனில்லாள் இடரை ஒழித்தது | ராம ஜெயம் |
| உண்மையின் வடிவாம் பீஜாக்ஷரத்தை ஓர்வாய் என்றது | ராம ஜெயம் |
| உறுதியைக் கொடுத்து மறதியைக் கெடுத்து உலகை காப்பது | ராம ஜெயம் |
| ஊணமில் உடலும் உயரிய பொருளும் உடனே தருவது | ராம ஜெயம் |
| ஊமை போன்ற உயிர்களும் பேசும் உயர்வை அளிப்பது | ராம ஜெயம் |
| என்றும் நமக்கு இன்பமளித்து எங்கும் இருப்பது | ராம ஜெயம் |
| எமக்கிது சாது பிறர்க்கிது தீது என்பது அற்றது | ராம ஜெயம் |
| ஏது மற்று ஏங்கி நிற்போர்க்கு ஏற்றம் தருவது | ராம ஜெயம் |
| ஏன உருக் கொண்ட வனியை ஏந்தி இருகையில் வைத்தது | ராம ஜெயம் |
| ஐம்பூதங்களை அடிமையாய் கொண்ட அனுமன் உரைப்பது | ராம ஜெயம் |
| ஐமுகத்தவனும் பங்கயத்தவனும் அமரரும் உரைப்பது | ராம ஜெயம் |
| ஒருவழி நில்லா அலையுறு மனதை ஒரு வழிபடுத்தும் | ராம ஜெயம் |
| ஒருவனும் யான் எனவே நிலை என்று உண்மை உணர்த்தும் | ராம ஜெயம் |
| ஓங்காரப் பொருள் உண்மையின் வடிவாம் ஓர்வாய் என்றது | ராம ஜெயம் |
| ஓவியந்தனிலும் காவியந்தனிலும் ஊக்கமளிப்பது | ராம ஜெயம் |
| ஔவை போன்ற ஆன்மாக்களுக்கும் அறத்தை உரைப்பது | ராம ஜெயம் |
| ஔடதம் போன்று படிப்போர் நமக்கு அனைத்தும் அளிப்பது | ராமஜெயம் |

*ராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம் ராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம்*
*ராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம் ராம ஜெயம் ஸ்ரீராம ஜெயம்* *(54தரம்)*

# ஸ்ரீ அனுமான் தியான ஸ்லோகங்கள்

அஞ்சனா தேவியினுடைய குமாரரும், வீரரும், ஜானகி பிராட்டியாருடைய சோகத்தைத்தீர்த்தவரும், அக்ஷய குமாரனைக் கொன்றவரும் இலங்கைக்குப் பயத்தை உண்டு பண்ணியவருமான ஸ்ரீ ஆஞ்சநேயப் பிரபுவே உன்னை வணங்குகின்றேன்.

மாபெரும் கடலான நீரை விளையாட்டாகத் தாண்டி ஜனக மஹாராஜனின் குமாரத்தியினுடைய மன வேதனையான அக்கினியை மாற்ற, அதே அக்கினியால் இலங்கை மாநகரை எவர் கொழுத்தினாரோ, அந்த ஆஞ்சநேயப் பிரபுவைத் கைகூப்பி வணங்குகிறேன்.

மனோ வேகத்தையும், வாயு வேகத்தையும் உடையவராகவும் இந்திரிய நிக்கிரகம் உடையவராகவும், மதி நுட்பத்தில் வல்லவராகவும், வாயு புத்திரனாகவும், வானர யூதப் பதிகளுக்கெல்லாம் தலைவராகவும் நின்ற, ஸ்ரீராம தூதனான ஆஞ்சநேயப் பிரபுவே உன் பொற்பாதங்களை வணங்குகின்றேன்.

அஞ்சனா தேவி குமாரராகவும், சிறந்த தாமரை புஷ்பம் போன்ற திரு முகத்தை உடையவராகவும், மஹாமேருவுக்கு ஒப்பான திவ்விய சரீரம் உடையவராகவும், பாரிஜாத விருட்சத்தின் கீழே வாசம் செய்கின்றவராகவும், இருக்கின்ற வாயு குமாரனான ஆஞ்சநேயப் பிரபுவே உன்னை வணங்குகின்றேன்.

எந்தெந்த இடங்களில் ஸ்ரீ ராமபிரானுடைய புகழைப் பாடுகின்றார்களோ, அந்தந்த இடங்களில் எல்லாம், தலையிலே கைகளைக் கூப்பிய வண்ணம், கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அகம் மகிழும் ஆஞ்சநேயப் பிரபுவே உன்னை வணங்குகிறேன்.

ஆரியர் குலத்திற்கு காவல் தேவனாகவும், அரக்கர் குலத்திற்கு கால தேவனாகவும் விளங்கும் ஆஞ்ச நேயப் பிரபுவே உன்னை வணங்குகிறேன்.

போர் தொடங்கிய வீர அரக்கர்களை சொசுக்களைப்போல் அழித்த ஆஞ்சநேயப் பெருமானே ! ஸ்ரீமத் நாராயணன் என்றும் பெரிய ரத்தின மாலையில் நடு நாயகமாக ஜொலிக்கும் மணியைப் போல விளங்கும் ஆஞ்சநேயப்பிரபுவே உன் பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மஹேந்திர மலையில் இருந்து பெரிய உருவத்துடன் தாவி அபார சமுத்திரத்தைக் கடந்து, அசோக வனத்திலே சீதா தேவியைத் தரிசித்த, அவ்வனத்தை அழித்து, அரக்கர் குலத்திற்கே காலா அக்கினிப் பிளம்பாக விளங்கிய மகா வீரப்பிரபுவே உன்னை வாழ்த்தி வணங்குகிறேன்.

# ஆஞ்சநேய நாமாவளி

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்

மாருதி ராயா ஜெய ஹனுமான்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்

வாயு குமாரா ஜெய ஹனுமான்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்

ஆஞ்சனை புத்ரா ஜெய ஹனுமான்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்

ஸ்ரீராம தூதா ஜெய ஹனுமான்

ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்

மஹானு பாவா ஜெய ஹனுமான்

# ஆஞ்சநேயர் போற்றி அகவல் -108

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓம் | அஞ்சனை மைந்தா | போற்றி | ஓம் | மந்தமாருதமே | போற்றி |
| " | அஞ்சினை வென்றாய் | " | " | சிந்தனைச் செல்வா | " |
| " | சொல்லின் செல்வா | " | " | சஞ்சீவி ராயா | " |
| " | வில்லின் கணையே | " | " | பஞ்ச முகனே | " |
| " | தோத்திரப் பிரியா | " | " | விசுவ ரூபா | " |
| " | சாத்திரத் தலைவா | " | " | விசுவேஸ்வரனே | " |
| " | சத்திய விரதா | " | " | ஆஞ்ச நேயா | " |
| " | வித்தகு வீரா | " | " | வாஞ்சை யானாய் | " |
| " | ஏழிசை நிதியே | " | " | சுக்ரீவ சகனே | " |
| " | ஆழிபைக் கடந்தாய் | " | " | துக்கம் களைவாய் | " |
| " | தன்பலம் அறியாய் | " | " | யோகனு மானே | " |
| " | என்னகம் நிறைவாய் | " | " | ஆகமும் அறிந்தாய் | " |
| " | பிரமச் சரியா | " | " | லங்கநா சனனே | " |
| " | பரமன் சொரூபா | " | " | தங்கமே னியனே | " |
| " | பேரறி வாளா | " | " | புதிரா ஊவனே | " |
| " | சீருப காரா | " | " | கதியா ஊவனே | " |
| " | அச்சுதன் துணைவா | " | " | ஆற்றல் வடிவா | " |
| " | வச்சிர வடிவா | " | " | போற்றல் உடையாய் | " |

" பிங்கள வர்ணா "
" மங்கள ரூபா "
" புஜபல தீரா "
" விஜயன் துணைவா "
" சிரஞ்சீவியனே "
" பரஞ்சுட ரொளியே "
" அருணனை வென்றாய் "
" தருண மழையே "
" வானரச் செல்வா "
" தீனரட் சகனே "
" வாயுபுத் திரனே "
" தூயரத் தினமே "
" இலக்குவன் உயிரோ "
" கலக்கமும் தீர்ப்பாய் "
" ஐம்புலன் வென்றாய் "
" எம்குல தேவா "
" இராம தூதா "
" நாமப் பிரியா "
" ஓம் இராமேஷ் டகனே "
" க்ஷேம மளிப்பாய் "
" அமிதவிக் ரமனே "

" அறிவா லயனே "
" நெறிகற் றவனே "
" ஈரநெஞ் சுடையாய் "
" நாரணன் துணையே "
" கவிக்குலத் திலகா "
" பவித்திர மானாய் "
" பிங்காட் சகனே "
" சங்கடம் தீர்ப்பாய் "
" விண்ணில் பறந்தாய் "
" கண்ணில் நிறைந்தாய் "
" கேஸரி தவமே "
" பாசம் உடையாய் "
" வீடணன் துணையே "
" நாடரும் நலனே "
" வாலுடை வரதா "
" சீலமும் உடையாய் "
" மாபெரும் தொண்டா "
" தாபம் தொலைப்பாய் "
" சசிவோத் தமனே "
" ஓம் வராக முகனே "
" சரீர சுகனே "

| | | | | | |
|---|---|---|---|---|---|
| " | எமையணு கிடுவாய் | " | " | கருட முகனே | " |
| " | அனிலாத் மஜனே | " | " | கடிவிஷம் தீர்ப்பாய் | " |
| " | நினைவில் உறைவாய் | " | " | ஹயக்கி ரீவா | " |
| " | ருத்திரப்பிரியா | " | " | மயக்கம் தீர்ப்பாய் | " |
| " | முத்திரைப் பொன்னே | " | " | நரசிம் மமுகா | " |
| " | லவகேஸ் வரனே | " | " | நடுநிலை யருள்வாய் | " |
| " | கலைகற் றவனே | " | " | வீர அனு மானே | " |
| " | அட்சயத் துவேசா | " | " | தீரம் அருள்வாய் | " |
| " | சட்டென வருவாய் | " | " | தவப்பிர காசா | " |
| " | கனிகள் | " | " | சிவப்பிர காசா | " |
| " | நனிசுகம் தருவாய் | " | " | உருவில் உயிரே | " |
| " | மஹாப லிஷ்டா | " | " | உயிரின் உணர்வே | " |
| " | சகாய தேவா | " | " | செல்வம் தருவாய் | " |
| " | அஹிமஹி மர்த்தனா | " | " | அல்லல் ஒழிப்பாய் | " |
| " | | " | " | விரைவில் வருவாய் | " |
| | | " | " | நிறைவைத் தருவாய் | " |

*ஓம் ஜெய ஹனுமானுகி ஜெய் !!*

# ஸ்ரீ ஆஞ்சநேயர் போற்றி – 108

ஓம் அஞ்சனா தேவி பெற்ற அனுமனே போற்றி

ஓம் ஆஞ்ச நேயனே எங்கள் அருமையே போற்றி

ஓம் இன்னலைத் தீர்க்க வந்த இறைவனே போற்றி

ஓம் ஈடிலா வீர தீர இளமையே போற்றி

ஓம் உன்னத வாலை உச்சி உகந்தவா போற்றி

ஓம் ஊறிலா வண்ணம் காக்கும் உத்தமா போற்றி

ஓம் எண்ணரும் கலைகள் வல்லாய் எளிமையே போற்றி

ஓம் ஏற்றமே அருளும் செல்வ மாருதி போற்றி

ஓம் ஐந்தெனும் புலனை வென்ற ஆண்டவா போற்றி

ஓம் ஒண்ணிதி வழங்க வல்ல உயர்குணமே போற்றி

ஓம் ஓங்காரம் செய்து துள்ளும் உரிமையே போற்றி

ஓம் ஔடதம் தேடிச் சேர்த்த அதிசயம் போற்றி

ஓம் கண்ணுதல் கருதும் செல்வ கண்மணி போற்றி

ஓம் காற்றிறை அருளால் வந்த கடமையே போற்றி

ஓம் கிண்கிணி தண்டை கொண்ட கிளர்ச்சியே போற்றி

ஓம் கீசகன் பகையின் அண்ணன் அனுமனே போற்றி

ஓம் குரங்கினத் தலைமைகொள் துணைவா போற்றி

ஓம் கூரிய சொல்லின் செல்வ சுந்தர போற்றி

ஓம் கெடுதியை களையும் எங்கள் இறைவனே போற்றி
ஓம் கேடுகள் நீக்கும் ஆஞ்ச நேயனே போற்றி
ஓம் கைவரு ராம பக்த அனுமனே போற்றி
ஓம் கொடுமையை நீக்க வந்த குமுதமே போற்றி
ஓம் கோடிசூ ரியப்பிரபை கொண்ட இறைவா போற்றி
ஓம் கெளவையைக் களையும் செல்வ மாருதி போற்றி
ஓம் சங்கடம் நீக்க எண்ணும் சத்தியம் போற்றி
ஓம் சாத்திரம் எல்லாம் கற்ற சற்குண போற்றி
ஓம் சிந்தனை சிறந்த செல்வ அனுமனே போற்றி
ஓம் சீரிய ஞான தீப மாருதி போற்றி

ஓம் சுந்தர முகம் கொள் ஞான சூக்குமம் போற்றி
ஓம் சூரியன் மாணியான சுடரொளி போற்றி
ஓம் செந்தமிழ் கம்பன் போற்றும் கீர்த்தியே போற்றி
ஓம் சேய்மையில் அண்மைபாம் துணைவரே போற்றி
ஓம் சைலமே உறையும் எங்கள் சற்குணர் போற்றி
ஓம் சொர்ணமே மேனியான சுந்தரா போற்றி
ஓம் சோகமே தீர்ப்பாய் எங்கள் அனுமனே போற்றி
ஓம் செளகரியம் சேர்ப்பாய் எங்கள் சஞ்சீவி போற்றி
ஓம் கடாயெனும் பெயர் கொண்ட கண்மணி போற்றி

ஓம் காட்டினில் மலையில் வாழும் கற்பகம் போற்றி

ஓம் கிளிபயில் சோலை எல்லாம் திரிகுவை போற்றி

ஓம் கீண்டினை அசுரர் மாளக் கீர்த்தியே போற்றி

ஓம் குறைவறு கல்வி ஞானம் படைத்தனை போற்றி

ஓம் கூறுசொல் தன்னின் செல்வன் சுந்தரன் போற்றி

ஓம் கெடுதியைச் சாய்த்து நீக்கும் அனுமனே போற்றி

ஓம் கேடறியாத தூத இறைவனே போற்றி

ஓம் கைநகம் வஜ்ர மான கண்மணி போற்றி

ஓம் கொள்கையில் உறுதி வாய்ந்த மாருதி போற்றி

ஓம் கோட்டையைத் தாண்டும் செல்வ மாருதி போற்றி

ஓம் கௌபீன் இறைவன் போற்றும் கனகமே போற்றி

ஓம் தண்ணிழல் ஆன எங்கள் புண்ணியா போற்றி

ஓம் தாங்கரும் துயரம் தீர்க்கும் தருநிழல் போற்றி

ஓம் திண்ணிய உரம்கொள் தேகா மாருதி போற்றி

ஓம் தீமையை நீக்கும் செல்வ அனுமனே போற்றி

ஓம் துணிவினில் சிறந்த எங்கள் அனுமனே போற்றி

ஓம் தூய்மை வாய்மை வாய்ந்த மெய்மையே போற்றி

ஓம் தெளிவுறு கேள்வி ஞானம் கிளர்த்துவை போற்றி

ஓம் தேடியே சஞ்சீ விநல்கும் சீர்த்தியே போற்றி

ஓம் தையலாம் சீதை போற்றும் தூதனே போற்றி

ஓம் தொழில் நலம் வலிமை நல்கும் தூயவா போற்றி

ஓம் தோள்வலி மிக்க ராம தூதனே போற்றி

ஓம் தௌமியன் போற்றும் ஞான அனுமனே போற்றி

ஓம் நற்குண சீலரே மாருதி வீர போற்றி

ஓம் நாடிய தரவே வல்லாய் நாயக போற்றி

ஓம் நிச்சயம் பிரமச் சரியம் காத்தனை போற்றி

ஓம் நீடிய பகையை நீக்கும் நிறைகுணம் போற்றி

ஓம் நுண்மைகொள் அறிவு கொண்ட மாருதி போற்றி

ஓம் நூலறி புலவ ஞான பானுவே போற்றி

ஓம் நெற்றியில் நாமம் காட்டும் நெறியதே போற்றி

ஓம் நேர்ந்தனை ராம நாமம் தூதனே போற்றி

ஓம் நைந்திடும் நிலைமை நீக்கும் நாயகா போற்றி

ஓம் நொந்திடா வண்ணம் காக்கும் நோக்கமே போற்றி

ஓம் நோயினை அண்டா வண்ணம் காக்கநீ போற்றி

ஓம் நௌவிபின் சென்ற இராம தூதரே போற்றி

ஓம் பலநலம் கொண்ட எங்கள் பரமனே போற்றி

ஓம் பாலக வஜ்ர தேகா அனுமனே போற்றி

ஓம் பிலமதில் சென்று வெற்றி சேர்த்தனை போற்றி

ஓம் பீழைகள் நீக்கும் செல்வ மாருதி போற்றி

ஓம் புன்மைகள் தன்னை நீக்கும் புனிதமே போற்றி

ஓம் பூவுடைக் கானம் வாழும் பூரண போற்றி

ஓம் பெருமைகொள் உரமே பெற்ற பரமனே போற்றி

ஓம் பேசரு வியாகரணம் பிறவெலாம் கற்றாய் போற்றி

ஓம் பைம்பொழில் திரியும் அன்பே அனைத்துநீ போற்றி

ஓம் பொறுமைகொள் அறத்தின்தூத புண்ணியா போற்றி

ஓம் போயினை வென்றாய் நன்றாய் பூரண போற்றி

ஓம் பௌவமே தாவிப் பாயும் பரமனே போற்றி

ஓம் எக்குலத் தாரும் போற்றும் இறைவனே போற்றி

ஓம் எங்ஙனும் நீயே உள்ளாய் இறைவனே போற்றி

ஓம் அச்சரத்தால் வாலி அழிந்திடச் செய்தாய் போற்றி

ஓம் அஞ்சனை செல்வ அரிய செம்மணியே போற்றி

ஓம் திட்டமாய்ச் செயல் செய்யும் தினகரன்தூத போற்றி

ஓம் திண்ணமாய் வெற்றி தரும் ஆஞ்சநேயனே போற்றி

ஓம் எத்திறம் தனிலும் வல்ல இனியமாருதியே போற்றி

ஓம் எந்தையர்சிந்தை வாழும் இறைவமாருதியே போற்றி

ஓம் எம்மருங் கினிலும் வாழும் இறைவா போற்றி

ஓம் எப்பரம் பொருளும் வாழ்த்தும் இனியவா போற்றி

ஓம் எவ்வனம் செலினும் உய்வன சொல்வாய் போற்றி

ஓம் எய்திடும் இனிமை எல்லாம் இயற்றுவை போற்றி

ஓம் இல்லற ராம தூதன் எங்கள் மாருதியே போற்றி

ஓம் நள்ளிரா தன்னில் காக்கும் காலசஞ் சீவி போற்றி

ஓம் ஆழ்கடல் கடந்த வஜ்ர தேகனே இறைவா போற்றி

ஓம் பாற்கடல் பிறந்த மாது பரிவுறும் கடமை போற்றி

ஓம் மார்பினைப் பிளந்து மாயன் மகத்துவம் அளித்தாய் போற்றி

ஓம் பன்னலம் சேர்க்கும் எங்கள் பத்ம தேகனே போற்றி

ஓம் நன்னயம் சேர்க்கும் எங்கள் ராம தூதனே போற்றி

ஓம் பொன்னவிர் அஞ்சனை தந்த புதுமையே போற்றி

ஓம் நூற்கடல் கடந்த எங்கள் நுண்மையே போற்றி

ஓம் நாற்பயன் விளைக்கும் எங்கள் நாயகா போற்றி

ஓம் பாற்படு பொருளில் எல்லாம் படர்ந்தனை போற்றி

ஓம் போற்றியே அனும போற்றி பூரணா போற்றி போற்றி.



# மங்கள கீதம்

ஜெய வீர அனுமனுக்கு சுப மங்களம்
ஜெய ராம தூதனுக்கு ஜெய மங்களம்

ஜெய.........

சுக்ரீவன் தோழனுக்கு சுப மங்களம்
ஸ்ரீராம பக்தனுக்கு ஜெய மங்களம்
வாயு குமாரனுக்கு சுப மங்களம்
அஞ்சனை மைந்தனுக்கு ஜெய மங்களம்

ஜெய.........

சிரஞ்சீவி அனுமனுக்கு சுப மங்களம்
தவயோக ஞானிக்கு ஜெய மங்களம்
புண்ய குமாரனுக்கு சுப மங்களம்
புவி காக்கும் அனுமனுக்கு ஜெய மங்களம்

ஜெய.........

உ

ஸ்ரீராம ஜெயம்

ஸ்ரீ ஜெய வீர
ஆஞ்சநேயப் பெருமான் பால்
நான் கொண்ட
பக்தியின்
வேட்கையால்
எழுந்த
எண்ணத்தின்
நோக்கமே
இந்த
மங்களம்
அருளும்
மாருதி
என்னும்
தொகுப்பு
இதில் ஏதும்
தவறுகள் இருப்பின்
அது நான் படித்த நூலின்
பதிப்பின் பிழையே அன்றி
என் தவறு அல்ல.
தவறு இருப்பின்
மனித நேயத்துடன்
மன்னித்தருள
வேண்டுகிறேன்.

பக்தியுடன்
"இரட்டைப்பாதை சேகர்"

ஸ்ரீராம ஜெயம்

**Sri Anjaneyar Temple**

3/11, Sri Bodhirukkarama Road

Kalubowila

Dehiwala

Sri Lanka

T. P. 726444

Printed by Unie Arts (Pvt) Ltd. Colombo 13.